குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 48 | சுக்கில ஆண்டு வைகா[illegible]த் திங்கள் 1[illegible] 6 -- 89 [இதழ் 7

மை ஆதீன முதற்குரவர்

குருபூஜை விழா

ஸ்ரீலஸ்ரீ

தருமகா சந்நிதானம்

அவர்கள்

காலுக் காட்சியில்

திருப்பனந்தாள்

ஸ்ரீ காசிமடம்

கயிலை மாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசாமித்

தம்பிரான்

சுவாமிகளுக்குப்

பான்னுடை போர்த்தி

ஆசியருளல்

26—5—89

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

சிவசமமே முத்தியெனின்
சித்தாந்த மன்றும்
சிவசமய பேதமெனச்
செப்பும் — அவைகளிலே
ஒன்றென்பர் வேறெனினு
மோரேக தேசமதம்
அன்றெனின்மற் றேற்கும் அது.

— முத்திநிச்சயம் 21

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

| மலர் 48 | 10-6-89 | இதழ் 7 |

உட்பொருள்

எண் பக்கம்

1 அரசு ஊழியர்கள் சிந்தனைக்கு ... 337

2 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 342

3 மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ... 349

4 ஞானமிர்தத்தில் உவமை நயம் ... 353

5 'பஞ்சாக்கை' வைப்புத் தலம் ... 358

6 மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ... 360

7 இறை உணர்வு ... 364

8 போதமும் சித்தியும் ... 367

9 பொய்யடிமை இல்லாத புலவர் ... 370

10 செய்திகள் ... 375

11 எதிர்காலம் ... 381

12 இதழ்வழிச் சைவசமயக் கல்வி V. பாடம்-5. ... 385

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 7

20343

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில – வைகாசி 10—6—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

அரசு ஊழியர்கள் சிந்தனைக்கு

தமிழக அரசுக்குப் பாராட்டு :

தமிழ்நாடு மாநில அரசு ஊழியர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாகக் கடந்த 1988 ஜூன் முதல் தேதியிலிருந்து, முன்தேதியிட்டு புதிய ஊதிய விகிதங்களை வழங்கப்படும் என்று, தமிழகமுதல்வர் மாண்புமிகு. கருணாநிதி அறிவித்துள்ளார். 32 வகையான ஊழியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியமும், 8 வகை ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களைவிடக் கூடுதலாகவும் புதிய ஊதிய விகிதம் அமுலாக்கப் படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். புதிய ஊதிய விகிதத்தால் குறைந்தது ரூ 284ம், அதிகபட்சம் ரூ 1200ம் தமிழக அரசு ஊழியர்கள் கூடுதல் ஊதியம் பெறுவார்கள் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. தமிழக அரசு ஊழியர்களின் கடந்த 40 ஆண்டுக் கால வேண்டுகோளை ஜனநாயக முறையில் ஏற்றுப் புதிய விகிதங்களை அறிவித்துள்ள தமிழக முதல்வரை ஞானசம்பந்தம் பாராட்டு கின்றது.

ஐந்தாவது ஊதியக் குழு :

கடந்த ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சி நிலவியபோது, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம், ஒருமாத போனஸ் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து ஏறத்தாழ ஒருமாத காலம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இடைக்கால நிவாரண மாக ரூ 70 வழங்கி, கொள்கை அளவில் அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று, ஓய்வுபெற்ற முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதி திரு ஜி. இராமானுஜம் தலைமையில், ஐந்தாவது ஊதியக் குழுவை மாண்புமிகு ஆளுநர் திரு. பி. சி. அலக்சாண்டர் அமைத்தார். ஊதியக் குழுவின் அறிக்கை தற்போது ஏற்கப்பட்டுள்ளது இதனால் மதிப்பூதியம் மற்றும் தொகுப்பூதியம்பெறும் 2. 80 லட்சம் ஊழியர்களும், 11 லட்சம் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களும் பயனடைவர். ஓய்வூதியம் பெறுவோரும் இதனால் பயன்பெற வுள்ளனர். போனஸ் கோரிக்கையை ஊதியக்குழு ஏற்கவில்லை.

அரசு ஊழியர் நலனில் அக்கறை :

'களஞ்சியமும் காலி, கஜானாவும் காலி' என்ற நிலையில் பொறுப்பேற்ற புதிய அரசு, புதிய ஊதிய உயர்விற்காக ஆண்டொன்றுக்கு ரூ 400 கோடி செலவிட முன்வந்துள்ளது, அரசு ஊழியர்கள்பால் கொண்ட நல்லெண்ணத்தால்தான் என முதல்வர் கூறியிருப்பது நினைவு கூரத்தக்கது. ஒரு அரசின் இயக்கமும், செயல் திறனும் அதன் ஊழியர்களின் திறமையைச் சார்ந்தே அமைய முடியும். இந்தியாவில் 9 மாநிலங்களில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பெற்று வருகிறது. ஒரே மாதிரிபணி செய்யும் மத்திய அரசு ஊழியருக்கும், மாநில அரசு ஊழியருக்கும் ஊதிய விகிதத்தில் நிலவிவந்த பெரிய இடைவெளி, மாநில அரசு ஊழியர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. நிதி நெருக்கடி மிக்க சமயத்திலும் அரசு இவ் வேறுபாட்டைக் களைந்துள்ளது வரவேற்கத் தக்கது. கலால் வருவாய் வகையில் 200 கோடியும், அரசு முடுக்கிவிடப்பட்டு வரிகள் முறையாக வசூலிக்கப்படுவதன் வாயிலாக ரூ 200 கோடியும் ஈட்டி, இவ்விழப்பை ஈடுகட்ட முடியும் என முதல்வர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஊழியர்களின் நல்லெண்ணம் :

முந்தைய அரசுவேலை நாள்களை வாரத்தில் ஐந்துநாள்களாக்கி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளை விடுமுறையாக அறிவித்தது. புதிய ஊதியவிகிதங்களை அறிவித்த முதல்வர் இரண்டாவது சனிக்கிழமை

தவிர, எஞ்சிய வாரங்களில் சனிக்கிழமை, ஜூலைமாதம் முதல், வேலைநாளாகும் என அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கதா கும், வாரத்தில் இரண்டு நாள்கள் விடுமுறை விடப்பட்டதன் மூலம் அரசின் இயக்கம் பெரிதும் தடைப்பட்டுத் தேங்கி நின்றது. மக்களும் அல்லலுற்றனர். அரசு அறிவிப்பை எதிர்ப்புக்காட்டாது அரசு ஊழியர்கள் ஏற்றுள்ளது அரசின் நல்லெண்ணத்தை உணர்ந்து, அதனோடு ஒத்துழைக்க அவர்கள் முன்வந்துள்ளதையே எடுத்துக் காட்டுகின்றது. இதேபோல் அரசின் நிதி நிலைமை கருதி, ஊதிய நிலுவைகளை நலநிதியில் சேர்க்கும் அரசின் ஏற்பாட்டிற்கு அவர்கள் இசைந்துள்ளதும் பாராட்டத்தக்கது.

பாராட்டும் குறைகளும் :

புதிய ஊதிய விகிதங்கள் அறிவிக்கப்பட்டது தொடர்பாக அரசைப் பாராட்டியும், குறைகூறியும் பலகருத்துக்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன. இவற்றையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். புதிய ஊதிய விகிதங்களைப் படிப்படியாக இரண்டு, மூன்று கட்டங் களில் அமல்படுத்தியிருக்கலாம். ஒரே நேரத்தில் பெரும் செலவை ஏற்க முன் வந்திருப்பது அரசின் நலத்திட்டங்களைப் பாதிக்கும் என முன்னாள் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். அரசு சாரா ஊழியர்கள், இவ்வறிவிப்பால் விலைவாசிகள் கடுமையாகி நடுத்தர வர்க்கத்தார் பாதிக்கப்படுவர் என்று கூறியுள்ளனர். விலைவாசி ஏற்றம் உற்பத்திக் குறைவால் உருவாவதே அன்றி, கூடுதல் ஊதியத்தால் அல்ல என்று வணிகர் சங்கப் பிரமுகர் ஒருவர் கூறியிருக்கிறார். "ஊதிய உயர்வு விலைவாசியைத் துரத்துகின்றது. விலைவாசி ஊதிய உயர்வைத் துரத்துகின்றது" என்பது மேலைநாடுகளில் வழங்கிவரும் ஒரு பழமொழி.

மத்திய மாநில அரசு ஊழியர்கள் :

மத்திய அரசு என்பது இந்தியா முழுமையையும் குறிப்பது. மாநில அரசு என்பது ஒரு பகுதியை மட்டும் குறிப்பது. மத்திய அரசு ஊழியர்கள் எந்த மாநிலத்திற்கும் பணி மாற்றம் பெற்றுப் போகவேண்டியவர்கள். அவர்கட்கு ஓரளவு சலுகைகள் கொடுப்பது நியாயமானதே என்பதையும் சிந்திக்கவேண்டும். ஒரு மாநிலத்தில் பிறந்து வளர்ந்தவர் அம்மாநிலத்தின் பிறபகுதிக்கு மாற்றப் பட்டாலே செலவு வேறுபடுகிறது. அதிலும் மாநிலம் விட்டு மாநிலம் மாறினால் ஆண்டிற்கு ஒரிருமுறை குடும்ப விசேஷங்கட்குச் சொந்த ஊர் சென்று வந்தால் செலவு கூடுதலாகும் அல்லவா?

மேலும் ஒரு மரம் போன்றது மத்திய அரசு. அதன் கிளைகள் போன்றன மாநில அரசுகள். கிளைகளால்தான் மரம் உரம் பெறுகிறது. வளமாகத் திகழ்கிறது. ஆயினும் கிளைகளின் தாயாக விளங்கும் மரத்திற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு என்பதை மறப்பதற்கில்லை. புனித உடலில் உள்ள உறுப்புக்கள் அனைத்தும் மனிதனுக்கு இன்றியாமையாதனவே. ஆயினும் எல்லா உறுப்புக்களுக்கும் சம அளவில் இரத்த ஓட்டம் நிகழ்கிறது என்று சொல்ல இயலாது. அவ்வவ்வுறுப்புகளின் செயற்பாடு, பயன் கருதி அளவோடுதான் குருதி ஓட்டம் நிகழ்கிறது. இதனையும் சிந்திக்கவேண்டியது நமது கடமையாகிறது.

அரசுக்குச் சில அறவுரைகள் :

அரசும், ஊழியர்களும், மக்களும் ஒரு குடும்பம் போல்பவர்கள். அரசு தன் ஊழியர்களின் நலன்களில் மட்டுமே அக்கறை காட்டி, சமூகத்தின் மிகப் பெரும்பான்மையரான மக்கள் நலன்களைப் புறக்கணித்தால் அது சமூக நீதியாகாது. பொதுவாக, குழுவாகக் கூடிப் போராடும் வல்லமை மிக்கவர்களே, அரசை நெருக்கடிக்கு ஆளாக்கி, வாய்ப்புக்களைப் பெற்று வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டு சமூகத்தில் நிலவுகிறது. ஆறுகோடி மக்கள்தொகை கொண்ட தமிழகத்தில் அரசுஊழியர்கள் 2% விழுக்காடு மட்டுமே. அரசு எஞ்சிய பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் கடமையும், பொறுப்பும் உடையது. அரசு தனதுவருவாயில் பெரும் பகுதியை ஊழியர்களுக்காகவே செலவிடுமானால் நலத்திட்டங்கள் பாதிக்கப்பட்டு, பெரும்பான்மை மக்கள் நலன்கள் பாதிப்புக்கு உள்ளாகும். அரசும், அரசு ஊழியர்களும் இவற்றைச் சிந்தித்துச் செயல்படவேண்டும் என ஞானசம்பந்தம் வேண்டுகின்றது. கோடிக்கணக்கான மக்கள் எவ்விதப்பாதுகாப்பும் அற்ற பணிகளில் மாதவருவாய் ரூ 300க்கும் குறைவாகப் பெற்று வறுமைக் கோட்டுக்கும் மிகக் கீழே வாழ்ந்து வருகிறார்கள் என்பதைச் சமூகநீதி அறிந்த ஒவ்வொருவரும் அரசும் சிந்திக்கவேண்டும்.

அரசு ஊழியர்கள் கவனத்திற்கு :

இன்னொரு பெரிய குறையையும் நாம் குறிப்பிட்டே ஆக வேண்டும். கீழ்மட்டம் முதல் மேல்மட்டம் வரை அரசு ஊழியர்களிடம் பரவலாகக் காணப்படும் பொறுப்பற்ற போக்கும், லஞ்சமும் மிகப்பெரிய சமூகத் தீமைகளாக உருவெடுத்துள்ளன. போதிய வருவாய் இன்மை லஞ்சம் பெறக்காரணம் என ஒருவாதம் கூறப்பட்டு வந்தது. தமிழகக்கல்வி அமைச்சர் திரு. க. அன்பழகன் புதிய ஊதியம் வழங்கியதன் நோக்கம், அரசு ஊழியர்களின் செயல் திறனை அதிகரிக்கவும், லஞ்சத்தை ஒழிக்கவுமே எனக்

கூறியுள்ளது சிந்திக்கத்தக்கது. பெரும்ஊதியத்திற்காகமனச்சாட்சியுடன் உண்மையாக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலான ஊழியர்களிடம் இன்று காணப்படாதது வருந்தத்தக்கது. மேலும் கடமையைச் செய்வதற்காக லஞ்சம் கோருவது கண்டிக்கவும், தண்டிக்கவும் வேண்டுவது. சமூகத்தில் நிறைவாக அரசு ஊதியம் பெறும் ஊழியர்கள் லஞ்சத்தில் ஆர்வம் காட்டுவார்களானால் என்றேனும் ஒருநாள் பொதுமக்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். அரசும் ஊழியர்கள் செய்யும் லஞ்ச ஊழல்களைச் சட்டபூர்வமாகத் தடுத்து நிறுத்த விதிகளைக் கடுமையாக்க வேண்டும் என ஞானசம்பந்தம் விரும்புகின்றது.

திருக்கோயிற் பணியாளர்கள் குறித்து :

திருக்கோயில் மற்றும் அறநிலையங்களில் பணியாற்றுவோர் ஒருமரத்தின் வேருக்குத்தண்ணீர்ஊற்றுபவர்களைப்போன்றவர்கள். அரசும், அரசுஊழியர்களும் மரத்திற்கு மழையைப் போன்றவர்கள். கோயில் பணியாளர்கள் நிலையை எண்ணினால் மத்திய அரசு மாநில அரசு ஊழியர்கள் ஊதிய இடைவெளியைக் காட்டிலும் மலையும் மடுவும்போல் மிகமிகப் பெரிதாகும். பெரும்பாலான கோயில் ஊழியர்கள் வறுமைக்கோட்டிற்கும் மிகமிகக் கீழ்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்கள் வறுமைக்கோட்டைத் தாண்டி வாழ வகையிருந்தும் வாழ்விழந்து தவிக்கிறார்கள். கோயில்களுக்கு வர வேண்டிய வருவாயில் பாதிவருமானம் வந்தாலே வறுமைக் கோட்டைக் கடந்து வளமாகவாழ்வார்கள். அரசு ஊழியர்கட்குக் காட்டிய கருணையை நமது முதல்வர், கருணாநிதியாகிய கடவுள் விற்றிருக்கும் கோயிலுக்கும் கோயில் பணியாளர்கட்கும் காட்டுவாரானால் கருணை மழையும் பொழியும்; காவிரியும் பெருகும். கழனிகளும் விளையும். கவலைகளும் மறையும்; களிமகிழ்ச்சி பொங்கும்.

உரிமையிலும் பெரியது கடமை :

'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்' என்ற சமூகநீதி தழைக்க அரசும், மக்களும், அரசு ஊழியர்களும் நடுநிலைதவறாத நெஞ்சத்தோடு தத்தம் கடமையை நிறைவேற்றுதல் இன்றியமையாதது. அரசும் தாய்போல் நின்று சமூகத்தின் எல்லாத் தரப்பினர் நலத்திலும் அக்கறை காட்டவேண்டும். உரிமையினும் கடமை பெரியது. தனிமனித நலத்தைவிட நாட்டின் நலம் இன்றியமையாதது. ஆட்சிக்கட்டிலில் அமர்வதைவிட, மக்கள் நெஞ்சில் இடம் பெறுவது உயர்வானது என்கின்ற எண்ணங்கள் அனைவரிடமும் தழைக்க ஞானசம்பந்தம் பிரார்த்திக்கிறது.

எல்லோரும், எந்நாளும் இன்புற்றிருந்திடவே அரசு
இல்லாமை எந்நாளும் இல்லாமை ஆற்றிடவே.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமை ஆதீனம் குருபூஜைப் பெருவிழாவில்
குருபூஜைத் திருநாளன்று

வடக்குக் குருமூர்த்த ஆலயங்களில்
வழிபாடாற்ற எழுந்தருளியபோது

ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் திருச்சந்நிதியில்
ஸ்ரீ குமரகுருபரரின் முந்நூறுவது ஆண்டு நினைவு
நிறைவுரையாக வழங்கியருளிய

ஆசியுரை

26—5—89

" சீரணியும் நுதலின்விழி மழுமான் தாகம்
திருந்தும் எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரை ஆள அவர்போல் வந்த
சைவசிகாமணி எவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடிய பொழில் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம் "

குருபூஜைத் திருநாள் :

இன்று குருபூஜைத் திருநாள். நமது ஆதீனத் திருமடத்தில் குருபூஜைத் திருமுகத்தைச் சீடர்கட்கும், பக்தர்களுக்கும் அனுப்பும் பொழுது அத்திருமுகத்தில், "வைகாசிமாதம் கிருஷ்ணபட்சம் சஷ்டி அன்று குருபூஜையும் மற்றைய நாள் மாகேசுவர பூஜையும் நடைபெறுகிறதாயிருக்கும்" என்று குறிப்பிடுவது மரபு. நமது ஆதீன ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தருக்குக் குருநாதர் ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர் ஆவார். அவர் முத்திப்பேறு எய்திய நாள் ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சம் சஷ்டி ஆகும். குருஞானசம்பந்தர் முத்திப்பேறு எய்தியநாள் வைகாசி மாதம் கிருஷ்ண பட்சம் சப்தமி திதி ஆகும். கமலை ஞானப்பிரகாசருக்கு உரிய சஷ்டி

நாளினைக் குருபூஜைத் திருநாளாகவும் குருஞானசம்பந்தருக்குரிய சப்தமி நாளினை மாகேசுவரபூஜைத் திருநாளாகவும் அமைத்து இங்கு வழிவழியாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. ஞானப்பிரகாசர் ஐப்பசி மாதத்தில் முத்திப்பேறு அடைந்திருப்பினும், அடைந்தநாள், சஷ்டி ஆதலாலும் சப்தமிக்கு முன்னுள் ஆதலாலும் அதனை வைகாசி மாத சப்தமிக்கு முன்னுளாக இணைத்துக் குருஞானசம்பந்தரின் குருவிற்கு முதல் நாள் குருபூஜைத் திருநாள் கொண்டாடப்பெற்று வருகிறது. குருஞானசம்பந்தர் தோற்றுவித்த இத்திருமடத்தில் குருபூஜைத் திருநாள் அவர்தம் குருநாதர் கமலை ஞானப்பிரகாசருக்குரிய திருநாளாகவும் மாகேசுவரபூஜைத்திருநாள் குருஞானசம்பந்தர் முத்திப்பேறு எய்திய திருநாளாகவும் அமைந்துள்ள அருமை எண்ணத்தக்கது. குருஞானசம்பந்தர் இத்திருமடத்தை ஞானப்பிரகாசர் திருமடம் என்றே குறிப்பர். இதனை, 'ஞானப்பிரகாசமாலை' என்னும் நூலில், 'ஞானப்பிரகாசன் பயில்மடத்தில் கெவுளிஉரைக்கும் பதி பசு பாசத்தின் கேள்விகளே'! என்று குருஞானசம்பந்தர் குறிப்பிடுவது கொண்டு உணரலாம். இவ்வாறு உள்ள உண்மைகளை அறிந்து கொள்வதற்கும் குருமூர்த்த ஆலயங்களில் வழிபாடு ஆற்றுவதற்கும், குருமூர்த்திகளின் அருள் அற்புத வரலாற்றுச் செய்திகளைத் தெரிந்துகொண்டு போற்றுவதற்கும் குருபூஜைத் திருநாள் இம்முறையில் இங்குக் கொண்டாடப் பெற்று வருகிறது.

குரு - சொல் விளக்கம் :

'குரு' என்ற சொல் கு+ரு என்று பிரிக்கும் தகையது. 'கு' என்பது அறியாமை எனும் பொருளையும் 'ரு' என்பது அதனை நீக்குபவர் எனும் பொருளையும் தருவது, எனவே 'குரு' என்பவர் அறியாமையைப் போக்கி அறிவுடைமையை ஆக்குபவர் என்பது கருத்து. அத்தகைய குருவினை நாள்தோறும் செய்யும் பூஜையின் நிறைவில் வழிபடுவதன்றி இதுபோன்ற சிறப்பு நாட்களில் போற்ற வேண்டுவதும் கடமையாகும்.

குருபூஜை - விளக்கம் :

உலகியல் நிலையில், முன்னே வாழ்ந்து மறைந்த தாய் தந்தையருக்கு, அவர் இறந்த திதியில் (திதிநாள் தேதியாயிற்று) அவரை நினைந்து போற்றுவது 'திதி கொடுப்பது' எனப்படும். இது ஜனசம்பந்த நிலையில் மகன் தாய் தந்தைக்குச் செய்யும் கடனாகும். இதேபோன்ற ஞானசம்பந்த நிலையில், வாழ்பவர்கள், வாழ்ந்து முத்திப்பேறு எய்திய குருமூர்த்திகளை, அவர்கள் சிறப்பு எய்திய நாளில், சிஷ்யர்கள் குருவை நினைந்து வழிபட்டுப் போற்றுவது குருபூஜை' என்று குறிக்கப்பெறும்.

உலகியல் நிலையில் மகன் தந்தைக்குத் திதி கொடுக்கும் பொழுது தந்தையார் அவரின் தந்தை பாட்டனார் அவரின் தந்தை முப்பாட்டனார் வரை நினைவு கூர்ந்து போற்றுவர். அருளியல் நிலையில், சிவபெருமானிடம் உபதேசப் பெற்ற நந்தியெம்பெருமான் தொடங்கி நிறைவாக முத்திப்பேறு எய்திய முன்னோர் வரை பாரம்பரிய நிலையில் அனைவரையும் நினைந்து போற்றுவது மரபாகும்.

குருமூர்த்த வழிபாடு :

இங்குக் குருபூஜைத் திருநாளில் காலையில் மேற்குக் குருமூர்த்த ஆலயங்களை வழிபாடு செய்தலும் மாலையில் வடக்குக் குருமூர்த்த ஆலயங்களை வழிபாடு செய்தலும் பிறகு ஆதிகுருமூர்த்திகளின் திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலய வழிபாடு செய்தலும் பிறகு குருமூர்த்திகளை ஸ்ரீ சொக்கநாதர் பூசைமடத்தில் சந்தனத்தில் ஆவாகனம் செய்து திருமெய்ஞ்ஞானப் பாவாடையிட்டுச் சிறப்பு வழிபாடு செய்தலும் மரபாக நிகழ்ந்து வருகிறது. வழிபாடு என்பது வாழ்த்து, வணக்கம், பொருள்நிலை உரைத்தல் என மூவகைப்படும். அவற்றுள் இக்குருமூர்த்த வழிபாட்டில் குருமூர்த்த ஆலயங்களின் முன்பு நின்று கண்ணினால் கண்டு வழிபாடு செய்தலோடு காதினால் அக்குருமூர்த்திகள் அருளிச் செய்திருக்கிற அற்புதங்களைக் கேட்டுணர்தலும் நிகழ்ந்து வருகின்றன. அவ்வகையில் இப்பொழுது நான்காவது குருமூர்த்திகளின் சந்நிதியில் நின்று வழிபாடுசெய்து கொண்டிருக்கிறோம்.

அனைத்தும் ஆண்டவனையே அடையும் !

நான்காவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணிதேசிகசுவாமிகள் அருளாட்சிக் காலத்தில் அற்புத நிகழ்ச்சிகள் பலவும் அவர்களால் நிகழ்த்தப் பெற்றுள்ளன. இவர் தமது தவவலிமையால் தம்மைப் பெற்றெடுத்த தாயாருக்கு முத்திநிலை அருளினார். அரவப் தீண்டி இறந்த ஒருவனைத் திருவருள் ஆற்றலால் உயிர் பெற்றெழச் செய்தார். இவர் தம்முடைய சீடர்கள் தமது திருவடி மீது இட்ட மலர்களைத் திருமுறைகளின் மீது காணும்படிக் காட்டினார். ஈண்டு மகாபாரத நிகழ்ச்சி ஒன்று நினைவு கூரத்தக்கது. அர்ச்சுனன் பாசுபதப் பெறற் பொருட்டுக் கண்ணபிரானுடன் திருக்கயிலை சென்றான். வழியில் பசியினால் வாடிய பொழுது, பூசை செய்யாமல் உண்ணாத அர்ச்சுனன் பூஜைப் பெட்டியை எடுத்து வராத நிலையில் தம்மையே சிவபெருமானாக நினைந்து பூஜை செய்க என்று கூறுகிறார் கண்ணன். அதனை ஏற்று அர்ச்சுனன் பூசிக்க, கயிலையில் பெருமானைத் தரிசித்தபோது அம்மலர்கள் இறைவனின் திருவடிகளில் இருப்பதைக் கண்டான் என்று

மகாபாரதம் கூறுகிறது. இதனால் குருவுக்கும் இறையருள் பெற்ற அடியவர்கட்கும் பூசிக்கும் மலர்கள் நிறைவில் சிவபெருமானுக்கே போய்ச்சேரும் என்பதை உணர்தல் இன்றியமையாதது.

முந்நூறுவது ஆண்டு நினைவு நிறைவு விழா :

இந்த நான்காவது குருமூர்த்திகளிடத்தில்தான் குமரகுருபரர் சீடராக விளங்கினர். குமரகுருபரர் முத்திப்பேறு எய்தி 300 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளன. அவரின் 300 ஆவது ஆண்டு நினைவு நிறைவு விழா நாடெங்கிலும் சென்ற ஓராண்டுக் காலமாகக் கொண்டாடப்பெற்றது. அவ்விழா ஓராண்டிற்கு முன்னர் 1984 ஆம் ஆண்டு இச்சந்நிதியில் குருமூர்த்திகளை வழிபட்டுத்தான் தொடங்கப் பெற்றது. இப்பொழுது இங்கு நிறைவுபெறுகிறது. எல்லாம் திருவருட்செயலே.

குமரகுருபரர் – வரலாறு :

குமரகுருபரர் ஐந்து வயதுவரை வாய்பேசாமல் இருந்து செந்திலாண்டவன் சந்நிதியில் முருகப்பெருமான் திருவருளால் பேசும் ஆற்றல் கைவரப் பெற்றார். "பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய" என்று தொடங்கும் கந்தர்கலிவெண்பா என்னும் நூலைப் பாடினார். இங்ஙனம் பாடிய பிறகு தமக்கு அறநெறியைக் காட்டக் குருநாதர் வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். நின்வாக்கு தடைப்படும் இடமே குருமூர்த்தமாகும் என்னும் செய்தி அசரீரியாகக் கிடைத்தது. பின்னர், குருபரர் மதுரைவந்து மீனாட்சியம்மையின்மீது பிள்ளைத்தமிழ்பாடி, அவ்வம்மையின் திருக் கரங்களால் முத்துமாலை சூட்டப் பெற்றார். பல தலங்களையும் வழிபாடு செய்து கொண்டு திருவாரூர் வழியாகத் தருமபுரம் வந்தடைந்தார். திருவாரூர் வந்த பின்னைத் தருமபுரம் வந்தது ஒரு திருவருட் குறிப்போடு நிகழ்ந்துள்ளது. தருமை ஆதீனத்தின் ஆதிகுருமுதல்வரின் குருநாதர் திருவாரூரில் வாழ்ந்த கமலை ஞானப்பிரகாசர் ஆதலின், அந்த இயைபு காரணமாகத் திருவாரூர் வந்து வழிபட்டதன்பின் தருமபுரம் செல்லவேண்டும் என்னும் குறிப்பு, குருபரருக்கும் கிடைத்திருக்கிறது.

நான்காவது குருமூர்த்திகள் குமரகுருபரரைப்பார்த்து, "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்று தொடங்கும் பெரிய புராணப் பாடலுக்கு அனுபவப்பொருள் கூறும் என்று ஆணையிட்டபொழுது அனுபவப் பொருள் கூற இயலாமையின் வாக்குத் தடைப்பட்டலைக் குருபரர் உணர்ந்தார். உடனே இவரே நம் குருநாதர் என்று வணங்கிஎழுந்தார். பின்னர், குருநாதரின் ஆணையினால் சிதம்பரம்

சென்றுவந்து, ஆசான்மூலம் துறவறம் பெற்று அதன்பிறகு குரு ஆணைப்படியே காசிக்குச்சென்று திருமடம் அமைத்துச் சிவப்பணி திருப்பணி செய்து வருவாராயினர். காசியில் தங்கி இருக்கும் பொழுது மூன்றுமுறை தருமபுரம்வந்து குருநாதரை வழிபாடாற்றியுள்ளார். மூன்றாம் முறை வந்தபோது ஸ்ரீ சொக்க நாதப் பெருமானைப் பூஜாமூர்த்தியாகப் பெற்றுப் பூசையுடன் சென்றுள்ளார் என்பது வரலாறு. இவர் 1688 ஆம் ஆண்டு வைகாசித்திங்கள் திருதியை நாளில் இறையடிநீழல் அடைந்தார்.

கலைஞானமும் மெய்ஞ்ஞானமும் :

இவ்வரலாற்றில் நுட்பமாக ஒருகருத்தைச் சிந்திக்கவேண்டும். குமரகுருபரருக்கு ஐந்தாவது வயதில் முருகன் அருளால் கிடைத்த ஞானம் சிவனடியைச் சிந்திக்கவைக்கும் உவமையிலாக் கலைஞானம் ஆகும். தருமையப்பதியில் குருமூர்த்திகளின் சந்நிதானத்தில் கிடைத்த ஞானம் பவமதனை அறமாற்றும் உணர்வரிய மெய்ஞ் ஞானம் ஆகும்.

தொடக்க நிலையில் இறையருள் பதிவு நிகழும்பொழுது கிடைக்கும் ஞானம் கலைஞானம் என்பதும் பின்னர்க் குருநாதரின் வழி கிடைக்கப் பெறும் அனுபவ ஞானம் மெய்ஞ்ஞானம் என்பதும் சமய உண்மைகளாம். ஒரோவழி சிலருக்கு இறையருள் பதிவு நிகழும் பொழுதே இறைவன் அம்மைஅப்பராகக் காட்சி தந்தருளி மெய்ஞ்ஞானத்தை வழங்கியருளுதலும் உண்டு.

அம்மை அப்பர் அருள் :

திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் கலைஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒரே நேரத்தில் கிடைக்கப் பெற்றன. இதற்குச் சான்றாகச் சேக்கிழார் சுவாமிகள் அவரவர்கள் புராணத்தில் அம்மை அப்பராக குருவாக இறைவன் காட்சி தந்தமையைக் குறிப்பிட்டுள்ளார்.

திருஞானசம்பந்தர் புராணத்தில், "விளங்கு மழவிடைமேலே பண்ணிறைந்த அருமறைகள் பணிந்தேத்தப் பாவையுடன் எண்ணிறைந்த கருணையினால் நின்றாரை எதிர்காட்டி" என்றும் திருநாவுக்கரசர் புராணத்தில், "மைவாச நறுங்குழல் மாமலையாள் மணவாளன் மலர்க்கழல் வந்தடையும் இல்வாழ்வு பெறத்தகு சூலையினுக்கு எதிர்செய்குறை என்கொல்?" என்றும் சுந்தரர் வரலாற்றில், "மாதோடு உடபரின் விடைமேல் தோன்றி அவர் தமக்கு உணர்த்தலுற்றார்" என்றுப வருப தொடர்கள் சான்றாக அமைந்துள்ளன.

திருஞானசம்பந்தரை இறைவன் அம்மையப்பராக எழுந்தருளி ஆட்கொண்டார் என்பதற்குச் சான்றாகச் சீர்காழியம்பதியில்

அம்மையப்பரின் திருக்கோலம் தோணியப்புரசு மலைமீது விளங்குகிறது. சீர்காழியில் உள்ள ஸ்ரீ பிரமபுரீசுவரர் லிங்கமூர்த்தியாகவும் ஸ்ரீ சட்டைநாதர் சங்கமமூர்த்தியாகவும் உச்சியிலுள்ள அம்மையப்பர் குருமூர்த்தியாகவும் விளங்குகிறார்கள் என்பது தலவரலாறு. "தோடு, கூற்று, பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" என்பது ஆன்றோர் வாக்கு. இம்மூன்று திருப்பதிகங்களும் தேவார மூவருக்கும் இறைவன் உமாமகேசனாய்க் குருவடிவில் அருள் பாலித்ததை மொழிகின்றது. சேக்கிழார் பெருமானும் உமா சமேதனாய் மூவர்க்கும் குருவருள் பாலித்தான் என்பதைக் குறிக்கின்றார்.

மூவர் அருள் வரலாறு :

சாத்திர ஆசிரியர்களுள் ஸ்ரீ மெய்கண்டாருக்கு பரஞ்சோதி மாமுனிவர் உபதேசித்தபோதே இருவகை ஞானமும் ஒருசேரக் கைவரப் பெற்றார். அருணந்தி சிவாசாரியர் சகலாகம பண்டிதராய் விளங்கியிருந்த போதிலும் அச்சுதக்களப்பாளர் குடும்பத்திற்குக் குருவாக இருந்த போதிலும் அவர் பெற்றிருந்த ஞானம் கலை ஞானமே ஆகும். மெய்கண்டாரால் ஆணவத்தின் சொரூபத்தைப் பார்வையால் சுட்டிக்காட்டப் பெற்ற நிலையில் பெற்ற ஞானமே மெய்ஞ்ஞானம் ஆகும். உமாபதிசிவாசாரியார் தில்லை நடராசப் பெருமான் திருக்கோயிலில் திருமேனிதீண்டி வழிபாடாற்றும் தகுதி பெற்றிருந்த பொழுது அடைந்திருந்த ஞானம் கலைஞானம் ஆகும். அவர் மறைஞானசம்பந்தரால், "பட்டகட்டையில் பகல் குருடு ஏகுதல்பாரீர்" என்ற தொடர்மூலம் ஆட்கொண்டபொழுது, "குருப்பிரசாதம் குருப்பிரசாதம்" என்று மறைஞானசம்பந்தரின் முழங்கை வழிவந்த கூழினை உண்ட பொழுது பெற்ற ஞானம் மெய்ஞ்ஞானம் ஆகும். குருஞானசம்பந்தர் மதுரையில் மீனாட்சி சொக்கேசரைத் தம்தாய்தந்தை என்றுணர்ந்த பொழுதும் பொற்றாமரைக் குளத்திலே பலரும் சிவபூஜை செய்வதைப் பார்த்துத் தாமும் பூஜை செய்ய வேண்டும் என்று விரும்பிய பொழுதும் இறைவன் அவர் கனவில் தோன்றி, 'ஈசானத்தில் பெட்டகத்துள் இருக்கிறோம்; எடுத்துப்பூசிக்க" என்று ஆணை பிறப்பித்ததை அறிந்து மறுநாள் காலை கண்ணுக்கு இனிய பொருளாக எடுத்த பொழுதும் அவர் பெற்றிருந்த ஞானம் கலை ஞானமே ஆகும். அதன் பிறகு இறைவனை நோக்கிப் பூஜைநெறி காட்ட ஒருகுருநாதரை அருளுக என்று வேண்டி, இறைவனின் அருளால் கமலை ஞானப்பிரகாசரை அடைந்து, குருநாதரிடம் உபதேசம் பெற்று, அவருக்குத் தொண்டு செய்து வரும் காலத்து, ஒருநாள் இரவு அர்த்தசாம வழிபாடு முடிந்து குருநாதருடன்

இல்லத்திற்குத் திரும்பிய பொழுது "நிற்க" என்னும் குருநாதரின் ஆணையைக் கேட்டு அதன்வழி கைவிளக்கு ஏந்திய நிலையில் இரவு முழுமையும் நின்றபொழுது அவருக்கு மெய்ஞ்ஞானம் கைகூடியது. இதனை அவர்பாடிய சிவபோகசாரப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

"பரவிமனம் போகாப் பரத்தடைய நாளும்
இரவுபகல் அற்ற இடத்தே — திரமாக
நில்என்றான் கண்ட எல்லாம் நேதிபண்ணிமும்மலமும்
கொல் என்றான் ஞான குரு."

குருவழிபாடு :

எனவே, இவ்வண்ணம் உள்ள வரலாறுகளை நுணுகிக் காணும் பொழுது, கலைஞானமும், மெய்ஞ்ஞானமும் ஒருங்கே ஒரோவழி கிடைத்தலும் உண்டு என்பதும் அவ்வாறின்றி இறையருள்பதிவில் கலைஞானமும் குருநாதரின் வழி மெய்ஞ்ஞானமும் ஏற்படுதலும் உண்டு என்பதும் தெளிவாகின்றன. குமரகுருபரருக்குச் செந்திற் பதியில் செந்திலாண்டவன் அருளால் கலைஞானமும் தருமையில் குருவின் அருளால் மெய்ஞ்ஞானமும் கூடியது எனலாம். கசடறக் கற்க வேண்டியவற்றைக் கற்றல் கலைஞானம் எனவும் அதன்வழி நிற்றல் அனுபவமாகிய மெய்ஞ்ஞானம் எனவும் சுருக்கமாக எண்ணலாம். குருபூசையினைக் கொண்டாடும் மெய்யன்பர்கள் குருவை வழிபடுவதோடன்றி அவரின் அருளற்புதங்களைக் கேட்டுணர்தலும் கேட்ட வண்ணம் வாழ முற்படுதலும் மெய்ஞ்ஞானம் பெறுதலுக்குரிய வாயிலாகும்.

வாழ்த்து :

இந்த ஓராண்டுக் காலமும் நமது கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய காசிவாசி கயிலைமாமுனிவர் இந்தியநாடெங்கிலும் குமரகுருபரரின் 300 ஆவது ஆண்டு நினைவு நிறைவு விழாவினைக் கொண்டாடத் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆங்காங்கே வாழும் அன்பர்களும் மிகவும் சிரத்தையோடு இவ்விழாவினைக் கொண்டாடி உள்ளார்கள். இப்புண்ணியப்பணியில் பங்குபற்றிய அன்பர்கள் பலரும் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும் மக்கள் அனைவரும் கலைஞானத்தைப் பெற்றுக் குருவருள் துணையுடன் மெய்ஞ்ஞானமும் கூடிவர முயலவும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

"உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் குருவருளால் தாரணியோர் தாம்பெறுக"

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

5. மார்க்கஸ் அரேலியஸ் (Marcus Aurelius)

(கி. பி. 76-132)

(மலர் 48, இதழ் 3, பக்கம் 147 இன் தொடர்ச்சி.)

அரும்புகழ் வாய்த்த அரேலியஸ் :

மார்க்கஸ் அரேலியஸ் (Marcus Aurelius) தத்துவஞான வானத்திலே தனிச்சுடர் வீசும் தன்னிகரற்ல தாரகையாவார். அவர் மிகுபுகழ் வாய்ந்த மேதை ரோமானிய சக்கரவர்த்தி. அவர் அந்தோனியஸ் பயஸ் (Antonius Pius) என்ற ரோமானிய மன்னனுக்கு சுவீகாரப் புதல்வனுகத் திகழ்ந்தார் - பின்னர் அவனுக்கு மருமகன் ஆனுர். அதன்பின் பயஸுக்கு வாரிசு ஆகி வளம் மிக்க ரோமாபுரி சாம்ராஜ்யத்திற்கு மாமன்னன் ஆனுர். இவரைப்பற்றி முன்னுள கவர்னர் ஜெனரல் திரு. இராஜகோபாலா சாரியார் சிறையில் இருக்கும் பொழுது அரியதொரு தமிழ்நூல் ஆக்கினுர். அந்நூலுக்குப் பெயர் "அரேலியரின் ஆத்மசிந்தனைகள்" என்பதாகும்.

அரேலியஸின் ஆட்சி :

அரேலியஸ், மகத்தான ஆட்சி புரிந்த மாமன்னர் ஆவார். பகைவனுக்கு அருள்புரியும் பண்பட்ட மாவேந்தன். புரட்சி புரிந்த ஒரு தானைத் தலைவனையும் மன்னித்துக் கருணைகாட்டினுர். இவரது மகன் மாற்றூர்களோடு சேர்ந்து கொண்டு மாபெரும் சண்டை செய்தான்-அவனையும் அடக்கி அரேலியஸ் மன்னித்து அணைத்துக் கொண்டார். இவர் காலத்தில் கிருத்துவ மதம் தோன்றி வளரத் தொடங்கியது. திரைமறைவில் தான், முதலாவது நூற்றுண்டில், கிருத்துவமதம் திகழ்ந்து மெல்லத் தலைதூக்கியது. அப்போது கிருத்துவ மதவாதிகளே புரட்சியாளராகவும், துரோகிகளாகவும் கருதப்பட்டனர் - பகைவர்கள் போல அவர்கள் மதிக்கப்பட்டு,

பல சோனங்களில் ஐரோப்பிய நாடுகளில் பாதிக்கப்பட்டனர். மார்க்கஸ் அரேலியஸும் அதற்கு விதிவிலக்கு அல்ல. அவரும் தம் ஆட்சிக்காலத்தில், (சம்பந்தர் காலத்தில் சமணர்கள் மொத்தமாகக் கழுவேற்றப்பட்டதுபோல்) நூற்றுக்கணக்கான கிருத்தவர்களைக் கொன்று விடுத்த ஆணையிட்டார். இஃது அரேலியஸ் வாழ்க்கை வரலாற்றிலே கருதத்தக்கதொரு களங்கம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கணித்து உரைத்துள்ளனர்.

பன்னிரண்டு நூல்கள் :

அரேலியஸ் பெரியதோர் ஆத்மஞானி - சீர்மிக்கதொரு சிந்தனையாளர். இவர் போர்க்களத்தில் போராடும் காலத்தில்ஓய்வு கிடைக்கும்போது ஒதுங்கிப்போய், அமைதியாக அமர்ந்து ஆத்ம சிந்தனை புரிவதுண்டு. அவர்வாழ்நாளில் அவர் இங்ஙனம் வரைந்த குறிப்புக்கள் இன்றும் நமக்குக் கிடைத்துள்ளன. அநேகமாக அக் குறிப்புக்கள் உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அவர்தம் குறிப்புக்கள் 12 நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலநூல் ரோமானிய மொழியில் உள்ளது. காலின்ஸ் பதிப்பு (Collins Edition) ஆங்கிலப் பதிப்பை அளித்துள்ளது. அந்நூலின் தலைப்பு, "மார்க்கஸ் அரேலியஸின் ஆத்ம சிந்தனைகள்" (Meditations of Marcus Aurelius) என்பதாகும். அந்நூலில் அரேலியஸின் வாழ்க்கை வரலாறு ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. பன்னிரண்டு பகுதிகளாக அவர்தம ஆத்மசிந்தனைகள் அழகாக அந்நூலில் அளிக்கப் பட்டுள்ளது.

சீரான சிந்தனை முறை :

நம்மில் அநேகர், நாம்பழகும் மக்களிடம் காணப்படும் மாசுகளை மட்டுமே கண்டு நன்கு தூற்றுகின்றனர். இதுவே உலகியலாக உலவுகிறது. ஆனால் அரேலியஸின் மதிப்பீட்டுமுறை முற்றிலும் வேறானது - உலகியலுக்கு மாறானது. மார்க்கஸ் அரேலியஸ் மாற்றவரிடம் காணப்படும் நிறைவைக்கண்டு மதிப்பார். அவர்பால் உள்ள அருங்குணத்தைப் பாராட்டி அவற்றைத் தமதாக ஆக்கிக் கொள்வார் - குறைவைக் கண்டால் குற்றம் கூறிச் சாடமாட்டார். அவர்தம் வளர்ப்புத் தந்தையிடம், கொடையை வண்மைக் குணத்தைக் கண்டு தாம் பின் பற்றுவதாகக் கூறுகிறார். தன் ஆசானிடத்திருந்து அடக்கத்தைக் கற்றுக்கொண்டதாகவும், நண்பரிடத்திருந்து நாவன்மையைப் பயின்றதாகவும், தாயிடத்திருந்து தயையைத் தெரிந்து கொண்டதாகவும் தம் முதல் புத்தகத்தில் தெரிவிக்கிறார். இப்படித் தாம் இனிது பழகி வந்த

இருபத்து ஐந்து பெயர்களைக் குறிப்பிட்டு அவரவரிடமிருந்து என்ன என்ன அருங்குணங்களைக் கண்டு தமதாக ஆக்கிக் கொண்டார் என்றதோர் அட்டவணையைக் குறிப்பிடுகிறார் மார்க்கஸ் அரேலியஸ்.

அரேலியஸின் அரியபோதனைகள் :

அரேலியஸ் நம் ஆத்ம சிந்தனைகள் என்ற தொகுப்பில் கூறியுள்ளவை எண்ணைத் தொலையாதனவாகும். எல்லாப் போதனைகளும் பொதுவாகத் தம்மை நோக்கியே கூறிக்கொண்ட தத்துவங்களாகும். அவை தொலையாத எண்ணிக்கை உடையனவாகையால் மாதிரிக்குச் சிற்சில மகத்தானக் கருத்துக்களை மட்டும் மதிப்பீடு செய்வோம். சிலர் சிலகாரியங்கள் தம்மால் செய்ய இயலாதவை என்றும் ஆற்றல் மிக்க சிலரால் ஆக்க இயலும் என்றும் கூறி ஏங்குவதைப் பார்த்திருக்கிறோம். அதைப்பற்றி அரேலியஸ்கணிப்பு எவ்விதம் எனக் காணுங்கள்.

"ஒரு காரியம் உன்னாலே செய்துமுடிப்பது கஷ்டமானது என்று கருதாதே; ஆனால் அக்காரியம் பிறன் ஒருவனால் ஆகாது என்று நினையாதே! அக்காரியத்தை மற்றவன் செய்து முடிப்பதை அகிலத்தில் பார்க்கிறோம்; ஆகவே ஒரு மனிதன் ஒருகாரியத்தைச் செய்வது முற்றிலும் சாத்தியம் என்றால், அஃது அவன் இயல்புக்கு ஒத்தது என்றால், மனமே! இதனை நீயுங்கூட அடைந்து மகிழ்வது ஆகாத ஒன்றா? சிந்தித்துப்பார்"

திருவள்ளுவர், அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல் இருந்து தம்மை இகழ்பவரையும் பொறுக்கவேண்டுவது தலையாய பண்பு என்று தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக் கூறுகிறார். இக்கருத்தையே, அரேலியஸ் அழுத்தமாக, ஆணித்தரமாக, அழகான உதாரணம் கூறிக் காட்டுகிறார்.

"எவர் எது புரிந்தாலும், எதுரைத்தாலும் நான் நல்லவனாகப் பொறுத்து, என் நல் இயல்பைக் கைப்பிடிக்கவேண்டும். தங்கமோ, அன்றி மரகதமணியோ அல்லது நீலமோ, மற்றவர் ஏது கூறினும், ஏது புரியினும் அவைகள் மாறாது இருப்பதுபோல நான் நானாக இருக்கவேண்டும். அவைகள் தங்கள் வனப்பையும், வண்ணத்தையும் மாற்றிக்கொள்ளாது எக்காலும் சுடர் விடுவது போல் நானும் என் நல் இயல்பை நாடிக் காத்து நல்லவனாக நண்ணவேண்டும்."

ஒருவன் கானகத்திற்குள் சென்றானும். போகப் போகப் பொன்னும் மணியும் பெற்றானும். மேலும் போகப்போகப் வைரமும்

முத்தும் கொண்டானும். மேலும் மேலும் போகப்போக அபூர்வ திரவியத்தை அடைத்தானும். இப்படி ஒர் அரிய சிறுகதை இராமகிஷ்ணர் கூறியுள்ளார்.

அதைப்போல ஒர் அருங்கருத்தை அரேலியஸ் அழகாகத் தெரிவிக்கிறார்.

''நீ உன் முகமாகப்பார். நன்மையூற்று உள்ளே உண்மையாக உள்ளது. நீ தோண்டத் தோண்ட உள்ளே அது கொப்பளித்து வெளிப்படும்.'

இறைநிலை பற்றி அரேலியஸ் இனிய கருத்தை இயம்புகிறார். அஃது அவர்தம் அறிவுத்திறத்தை வெளிப்படுத்துகிறது.

"கடவுள் மனிதனுக்கு உள்ளே உள்ளான்; ஆகையால் நாம் நம்மோடு உள்ளே இருக்கும் இறைத்தன்மையுடன் ஈடுபாட்டோடு தொடர்பு கொள்ளவேண்டும் இம்முறையிலேதான் நாம இறைவன் இயல்பையும் அவனைப்பற்றிய ஞானத்தையும் அடைய இயலும். இதுவே தக்க மார்க்கம்.

அரேலியலின் சமுதாயக் கோட்பாடு அலாதியானது. சமுதாயத்திற்கு எது நலலதோ அதனைச் செய்யவேண்டும், சமுதாயத்திற்கு எது ஏற்றநல்லவோ அதனைத் தவிர்க்கவேண்டும். என்றார். அதனை ஒர் அரிய உதாரணம் காட்டி அரேலியஸ் அறிவிக்கிறார்.

''தேன்கூட்டிற்கு எது நல்லதோ அது தேனீக்கு நல்லது. கூட்டிற்கு எது கூடாததோ அது தேனீக்கும் ஆகாதது. அதுபோல் சமுதாயத்திற்கு எது நல்லதோ அதை நான் ஆற்றவேண்டும்; சமுதாயத்திற்கு எது தீதோ அதைதான் தவிர்க்க வேண்டும்'' என்றார் அரேலியஸ்.

ஆதார நூல்கள் :

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophersby Thomos & Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

ஞானாமிர்தத்தில் உவமை நயம்

புலவர் திரு. சி. இலட்சுமணன், எம். ஏ., பி. எட்.,
சிங்கம்புணரி.

தத்துவ மணிமுடி :

மேலை நாட்டில் விஞ்ஞானம் முளைவிடுவதற்கு முன், கீழை நாடாகிய இந்தியாவில் மெய்ஞ்ஞானம் ஆலெனத்தழைத்து, விரிந்து செழிப்புற்று விளங்கியது "The Tao of Physics" எனும் நூலின் ஆசிரியர் "கீழைநாட்டுச் சமய தத்துவம் மறைபொருளான அறிவாக விளங்குகிறது. கால எல்லைக்கு அப்பாற்பட்ட இத் தத்துவம் காரணங் காண இயலாதது; தகுந்த சொற்களால் கூறவியலாதது" என்கிறார். இன்றைய விஞ்ஞானிகள் பலரும் ஆய்ந்து ஆய்ந்து கூறும் உண்மைகள், நம் நாட்டின் நூல்களில் ஏற்கனவே சான்றோர்களால் குறித்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வான்றோர்கள் சமயத்தையும், சமயக் கொள்கைகளையும் சமுதாயத்துடனும், தனிமனித வாழ்க்கையுடனும் பிணைத்து வைத்துள்ளனர். இந்திய வேதங்களிலும் ஆகமங்களிலும் நம் முன்னோர்களின் - முனிவர்களின் - அறிவுக் கூர்மையையும், தெளிவையும் உணரலாம். அப்பெருமக்கள் உலகியலை மட்டுமன்றி உலகிற்குத் தலைவனாய இறைவனையும், உயிர்களையும்பற்றி ஆய்ந்து கூறிய உண்மைகளைத் தத்துவங்கள் எனக் கொள்கின்றோம். இத்தகைய தத்துவங்கள் பல இந்தியாவிலுள்ளன. இத்தத்துவங்களில் ஒன்றுதான் சைவசித்தாந்தம். சைவசித்தாந்தம் இறை, உயிர், தளைகளைப்பற்றித் தெளிவாகக் கூறுகிறது. இதனை இந்தியத் தத்துவங்களின் மணிமுடியென்பர்.

கி. பி. 13 ஆம் நூற்றாண்டினராகிய ஸ்ரீ மெய்கண்டார் இவ்வுயர் தத்துவத்தைச் "சிவஞான போத"மெனும் செந்நூலாக ஆக்கி அருளியுள்ளார். இவ்வருள் நூலைப் பின்பற்றி இவரது மாணாக்கர்களும், மெய்கண்டார் சந்தானத்தைச் சேர்ந்தவர்களும் இதற்கு விளக்கம் தரும் உரை நூல்கள் எனக்கூறத்தக்க வகையில் 'முன்னோர் நூலின் முடிபொருங்கொத்து' வழி நூல்களும் செய்துள்ளனர். "சிவஞான போத" அடிச்சுவட்டில் இன்றுகாறும் பல நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பதிலிருந்து முதல் நூலின் சிறப்பை நன்குணரலாம். தெய்விகத்திருநூலாகிய மெய்கண்டார் நூலுக்கு முன்பே சித்தாந்த நூல்கள் பல இருந்திருக்க வேண்டும்.

திருவியலூர் உய்யவந்த தேவநாயனர் இயற்றிய திருவுந்தியாரும், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர் அருளிச்செய்த திருக்களிற்றுப்படியாரும் உயர் சிவஞானபோதத்திற்குக் காலத்தால் முந்தியன என்பது கற்றோர் கருத்து. இவற்றைப்போலவே "ஞானமிர்தமும்" பதினுன்கு சாத்திர நூல்களுக்கும் முற்பட்டதாகும்.

வாசிசர் பற்றிய குறிப்புக்கள் :

திக்கெலாம் புகழ் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ளது திருவாலீசுவரம். திருவாலீசுவரத்தில் 'கோளகி' மடம் ஒன்றிருந்தது. இத்திருமடத்தில் துறவேற்று இருந்த கோளகி சந்தானத்தைச் சார்ந்த வாகீச முனிவரால் இயற்றப்பட்டது. தேவாரம் பாடிய மூவர்க்கும் முற்பட்டவர் இவர் என்பது ஆய்வாளர் கருத்து. கா. சு. பிள்ளை அவர்கள் களப்பிரர் காலத்தை அடுத்ததாகக் கொள்வார்கள். கோளகி சந்தானம் வடபுலத்தில் தோன்றி பாரதமெங்கும் பல மடங்களை நிறுவி இறைப்பணியாற்றி வந்தது. அத்திருமடங்களில் வாழ்ந்த முனிவர்களுள் ஒருவராய "பரமானந்த மாமுனி" வாகீசமுனிவரின் குரு என்பதை

" ....நற்கோடலம் பாகை அதிபன் எங்கோன்
திருநெறி காவலன் சைவ சிகாமணி சில் சமய
மருள்நெறி மாற்ற வரும் பரமானந்த மாமுனியே "

எனத் தனிப்பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. ஞானமிர்த 28 ஆம் பாவால்வாகீசரின் இயற்பெயர் "அருள்மொழித் தேவர்" என்பதனை அறியலாம்.

" பொருள்மொழி போகக் கிரியையின் புணர்த்த
அருள்மொழி திருமொழி போலவும் " (ஞா. 28

இந்நூல் "திருமிகுஞானம், இலங்கொளிர் யோகம், நலங்கிளர் கிரியை, சரியை" (ஞா. 7) என்று நான்கு பகுதிகளைப் பெற்றிருந்தது. ஆனல் தற்போது 78 அகவற்பாக்களடங்கிய ஞானபாகம் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளது. சித்தாந்த சாத்திர நூல்களிலேயே காலத்தால் முந்திய இந்நூலின் "கிரியாபாதத்திலிருந்த ஒருசெய்யுளை த்தனத்திரு சிவஞானசுவாமிகள் தம்சிவஞானமாபாடிய நூலில் குறித்துள்ளார்கள். மேலும் மாபாடியத்திலும், சிற்றுரையிலும் பலவிடங்களில் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்கள். திருவாலீசுரத்தில் இந்நூல் சிவதன்மமாகப் படிக்கப்பட்டதை அங்குள்ள கல்வெட்டொன்று குறிக்கிறது. ஏறக்குறைய முப்பதிற்கு மேற்பட்ட இடங்களில் தலைசிறந்த உவமைகள் கையாளப்பட்டுள்ளன. நாம் சிலவற்றை மட்டும் இங்குக் காண்போம்.

உடல் – குடம் :

சித்தாந்தம் பதி, பசு, பாசம் ஆய மூன்றினைப் பற்றிப் பேசுகின்றது. "பதியினைப் போல் பசு, பாசம் அநாதி" என்பது அதன் உறுதியான கொள்கை. பசு என்றால் உயிர், இதனை 'ஆன்மா' எனவும் கூறுவர். ஒருவர் சிவபதம் அடைந்து விட்டால் "உயிர் பிரிந்தது" என்கின்றனர். பின்னர் இறந்தார்க்குரிய கிரியைகள் செய்யும்போது "ஆன்மா" சாந்தியடையும் என்கின்றனர். இது இன்றைய உலகியல். உயிர் உடலுடன் இணைந்துள்ளது. உயிர் உடலை விட்டுப்பிரியும் தன்மையது. உடலை உயிர் இயக்குகிறது. உடலோ அறிவற்றது. இதனை ஓர் அழகிய உவமை மூலம் ஞானாமிர்தம் விளக்குகிறது. மண்ணால் செய்யப்பட்டக்குடம் ஒன்றுளது. குடம் வைத்த இடத்திலேயே இருக்குமன்றித் தானே செயல்படாது. அதனை ஒருவர் தூக்கிச் சென்றால் செல்லும்; கவிழ்த்தால் கவிழும். அதனைப் போல் இவ்வறிவாற்றலற்ற குடம் போன்ற உடலைப் போக்குவரத்துப்படுத்துகிறவன், செயற்படுத்துகிறவன் தான் அறிவன். அதாவது ஆத்மா,

உழிதரல் இயைந்த பழிதரு ஆகத்து
அழியா அறிவன் கழியான்; ஒழியாச்
சேதனம் அன்மையில்; கடம் போல் ஆதலின்
எய்யாது இயற்றியான் எவன்? அவன் பொய்யாப்
புற்கலன் என்க! ஒற்கம் இல் சேதனம்
அறிவு வறிது அசேதனம் என்ன
தெறிஅறு புலவர் அறிவு அறிவரையே. (ஞா. 11)

ஆடிப்பாவை !

மேலும் கூறுவார், இவ்வுடல் உயிருடன் விளங்கும்போது மகளிர் காமதேவன் என்று கொண்டாடினர். உயிர் போய் விட்டாலோ இதனை எரியூட்டுவர். இவ்விரண்டு செயற்கும் - கொண்டாடப்படுதற்கும், எரியூட்டப்படுதற்கும் - உரிய உடல் ஒன்றுதானே? ஆனால் நீ வேறுபாடு காண்கின்றாயல்லவா?

கண்ணாடியில் தோன்றும் மனித பிம்பமும் குளிர்ந்த சந்திர வொளியில் தோன்றும் மனித நிழலும் தாமே அசையா. உருவம் அசையின் அவையும் அசையும். அதாவது பொம்மலாட்டத்தில் செயற்படும் தோற்பொம்மையைப்போல் அல்லவா? அதுபோல ஆன்மாவுடன் கூடிய உடலங்கள் தாம் செயற்படும். உடலை இயக்கி ஆட்டுவித்துச் செயற்படுத்துவது ஆன்மாவாகிய அறிவனும்.

"...

எரி விருந்து ஆய ஈங்கும் நீண்ட
அரி தரு கண்ணியர் மதனன் என்ற ஆங்கும்
வேற்றுமை உளதேல் சாற்றுக மற்று இரி
ஆடிப்பாவையோடு அலர் நிழல் பாவை
கைகால் மெய் பிறிது எவையும் பைப்பயத்
தூக்கின் தூக்கி மேக்கு உயர்பு உயர்தல்
பொறியொடு சிவணல் என்ன
அறிவொடு செறியும் நெறிவரும் உடலே" (சூ. 13)

ஏற்றத் தாழ்வு ஏன்?

இன்றைய உலகில் நெறிதவறிச் செல்வோர் செல்வந்தர்களாகத் திகழ்கின்றார்கள்; புகழும் பதவியும் அவர்களைத் தேடி வருகின்றன. நேர்மையாளர் – உண்மையான அறிவாளி – மனச் சாந்தியுடன் துன்பச் சேற்றில் உழல்கின்றனர். இதற்குக் காரணம் என்ன? வள்ளுவரோ "நோற்பார் சிலர் நோலாதார் பலர்" என்று தமக்கேயுரிய முறையில் இரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டார். ஆன்மிகச் செல்வர்கள் அவனவன் கன்மாப்படி நடக்கும் எனக் கூறுகின்றனர். இதனையே சாதாரண மக்கள் தலைவிதி என்கின்றனர்.

உலகத்தவர் அனைவரும் இன்பமான வாழ்க்கையையே விரும்புவர். இது இயல்பு, இயற்கை. ஆனால் உலகில் சிலர் இன்ப வாழ்க்கையும், சிலர் துன்ப வாழ்க்கையும் நடத்துகின்றனர். இதற்குரிய காரணத்தை ஓர் உவமையால் வாகீசமாமுனிவர் விளக்குகின்றார். பலரும் கூடித் தத்தம் வயலை உரிய பருவத்தில் நன்றாக உழுது, உரமிட்டுப் பண்படுத்தி நெல்லை விதைக்கின்றனர். நிலம், விதை, முயற்சி ஆகியவற்றில் மாற்றம் ஒன்றுமில்லை. ஆனால் உழவர் அனைவரும் ஒரேதரமான, அளவான பயனையா பெறுகின்றனர்? அளவில் கூடுதல் குறைவு ஏற்படுகிறது. சிலர் நல்ல நெல்லைப் பெறுகின்றனர். சிலர் சாவி நிறைந்த நெல்லைப் பெறுகின்றனர். முயற்சி ஒன்றாக இருக்க, பயனில் மட்டும் வேறுபாடு தோன்றக் காரணம் யாது? இதற்குக் காரணம் அந்தந்த விவசாயிகளின் 'கன்மம்' அல்லது கருமமே காரணம் என்கின்றார்.

செய்வினை ஒத்தக்கண்ணும் மைஅறு
சாலி மேவினர் பலரே; பலர் அதன்
வாலிய விந்துவும் மருவா தோரே
ஆயிடைக் கருமம் காரணம்
.... (சூ 20)

ஆம்! உலகவாழ்வில் ஏற்படும் ஏற்றத்தாழ்விற்கு உயிர்களின் கன்மமலமே காரணம்.

படைத்தவன் ஒருவன் :

நாம் வாழும் உலகமும், நம்மோடுவாழ்கின்ற பல்வகை உயிர்களும், ஏனைய பொருள்களும் தாமே தோன்றியனவா அல்லது ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டனவா? பலராலும் வினவப்படும் வினாக்கள் தாம் இவை. தாமே தோன்றி, நின்று, அழியும் இயற்கைப் பொருள்கள் என்பர் கருத்தாளர்சிலர். இவை இறைவனாகிய ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டவை என்பது சமயவாதிகளின் கருத்து.

வீதிவழியே செல்லும் ஒருவன் ஒருமரத்தின் நிழலில் குயவன் ஒருவன்மட்பாத்திரங்களைச் செய்துகொண்டிருந்ததைப்பார்த்தான். பின்னர்ச் சந்தைக்குச் சென்றான். அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பல்வேறு வகைப்பட்ட மட்பாத்திரங்களையும் கண்ணுற்றான். அவன் இவையும் யாரோ ஒருவனால் செய்யப்பட்டவை தாமே என்ற முடிவுக்கு வருவானன்றோ? முன்னர்க் கண்ணால் கண்டதைக் கொண்டு இப்போது செய்தவனைப் பற்றி முடிவு செய்தான். மட்பாத்திரங்களைச் செய்தவனைப் போலவே காட்சிதருகின்ற இவ்வுலகத்தையும் படைத்தவன் ஒருவன் உளனாதல் வேண்டும். அழகிய தேராக இருந்தாலும் அதனை ஓட்டுதற்குச் சாரதி-ஓட்டுநர் ஒருவர் தேவை. இதனைப் போலவே உலகிற்கும் – செயல்பட- பதியாகிய ஒருவன்தேவை என்று பதி (இறைவன்) உண்மையையும் விளக்கிக் கூறியுள்ளார்.

"...
இருங் கடம் அதனோடு இயற்றிய ஒருவனை
ஒருங்குடன் கண்டோன் ஒழிந்து இங் கிரி கடம்
கண்டால் இவையும் அவன் எனக் கொண்டாங்கு
உண்டோ உலகம் உருற்ற உடன் ஒருவன்
கண்டு மற்று இதுவும் உண்டு இயல் என... (சூ. 57)

.... அறிவனை விராஅக்
குறிபரல் போதல் கூடாது உறுதேர்
ஆக்கோல அவை இனிது உய்க்கும்
நீதியான் எவன் பதியே .... (சூ. 58)

சைவ சித்தாந்தப் பெருநூல்களின் பிரமாணம் எனக் கூறத்தகும் இந்நூலில் தம் கருத்தைப் பல உவமைகளாலும், புராணக் கதைகளாலும் வாகீச முனிவர் செவ்வையாக யாவரும் எளிதில் உணரும் வண்ணம் விரித்துரைக்கின்றார்.

'பஞ்சாக்கை' வைப்புத் தலம்

வித்துவான் திரு. தா. குருசாமி

மதுரை.

தருமை ஆதீனம் மேவிய செந்தமிழ்ப்பரமாசாரிய மூர்த்தியாகிய 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களின் சித்திரைத் திங்கள் இரண்டாவது ஜென்ம நட்சத்திர ஆயில்ய நாள் 12—5—89 தேதி பஞ்சாக்கை என்னும் தேவார வைப்புத்தலம் புதிப்பித்து வழிபட்ட நாளாக அமைந்தது.

'பஞ்சாக்கை' திருக்கடவூருக்கு மிகவும் அண்மையில் உள்ளது. 'சிவஸ்தலமஞ்சரி' ஆசிரியர் வ. த. சுப்பிரமணியபிள்ளை இச்செய்தியைத் தமது நூலில் குறிப்பிட்ட காலத்திலேயே கோயில் இடிபாடுகளுடன் உள்ளதாகக் குறிப்பிடுகிறார். கோயில் மேலும் இடிந்து பாழடைந்து பரிவார தெய்வங்கள் இல்லாமல் இலிங்கம் மட்டும் தப்பித்து விளங்கியது. சைவர்களின் நல்லூழால் குருமணியவர்கள் திருவுளம் பற்றித் திருக்கடவூர்த் திருக்கோயில் தொண்டர்களைக் கொண்டு தமது ஜென்ம நட்சத்திர நாளில் பஞ்சாக்கைத் தலத்தைத் திருப்பணி செய்தார்கள்; வழிபட்டார்கள்.

சொக்கநாதப் பெருமானின் திருவருளாலும் குருவருளாலும் அடியேனுக்குப் 'பஞ்சாக்கை'ப் பணியில் பங்கு கொள்ளும்படி மகாசந்நிதானம் அவர்களின் உத்தரவு, முன்னோர் செய்த தவத்தால் கிட்டியது. 'பஞ்சாக்கை' என்னும் இத்தலம் மிகச் சிறியது. அரை ஏக்கர் நிலப்பரப்பில் சுவாமி அம்பாள் பரிவார தேவதைகளுடன் இருந்திருக்க வேண்டும். கோயிலுக்குரிய கிணறு பக்கத்தில் உள்ளது. அகழ்ந்து பார்த்தால் பல விக்கிரகங்கள் கிட்டக்கூடும். கல்வெட்டு அழிந்துள்ளது.

இலிங்கத் திருமேனி பழுது படாமல் உள்ளது. ஆவுடையார் மட்டும் சுழன்று மாறி இருந்தது. இதனைச் சரி செய்தும் எதிரே இடபவிக்கிரகம் மண்ணுள் புதைந்திருந்ததை வெளிக்கொணர்ந்தும் மகாசந்நிதானம் அவர்களின் ஜென்ம நட்சத்திர நாளில் அவரோடு பக்தர்கள் அனைவரும் வழிபடும் புண்ணியப்பேறு கிட்டியது.

குருமணி அவர்கள் தக்க பணியாளர்களையனுப்பியதோடு, குருக்கள் பரிசாரகர்களையும் அனுப்பியருளி எண்ணெய்க்காப்பிட்டு, சுவாமிக்கும் இடபத்துக்கும் திருமுழுக்காட்டி, சிவாகம விதிப்படி கிலமான கோயிலுக்குச் செய்யவேண்டிய அனைத்து உபசார வழிபாடுகளைச்செய்து, அந்த வட்டத்தில் உள்ள மக்களையும் வழிபாட்டில் ஆற்றுப்படுத்தி எங்களையும் நெறிப்படுத்தியருளினார்கள்.

சைவத்தமிழர்கள் சிரத்தையோடு சிவத்தலங்களைவழிபடுதலும் பழுதுபட்ட திருக்கோயில்களைத் திருப்பணி செய்தலும், பூசையற்ற தலங்களில் நித்திய பூசைநடத்தி வைத்தலும் மேலான சிவபுண்ணியங்கள்.

திருக்கோயில் முதலியவை அழிந்தால் அவைகளை முன்போலச் செய்தவர் பெறும் பயன் அவைகளை முன்செய்தவர்கள் பெற்ற பயனிலும் ஆயிரம்மடங்கு அதிகமாகும். திருக்கோயில் முதலியவைகளிலே ஓர் உறுப்புச் சேதமுற்றால், அதனை முன்போலச்செய்தவர் பெறும் பயன் முன்செய்தவர் பெற்ற பயனிலும் நூறு மடங்கு அதிகமாகும் - என்று சிவபுண்ணியத் தெளிவு செப்பும்.

மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா மிலிங்கமாதி நளின புட்கரணி யாதி
சேத முற்றிடின் முன்போலச் செய்கின்றோர்க் குறும்பலன் தான்
ஓது முன் செய்தோர் தம்மில் ஆயிரம் குணிதம் ஓங்கும்.

என்ற பாடலும்,

உரைத்திடும் மடங்களாதி உறுப்பினிற் சிதைவினூலில்
தெரித்திடும் முறையே தன்றுந் தெளிவுறச் செயகின்றோர்க்கு
வரைத்திடின் முன்னஞ் செய்தோர் மருவிடும் பலத்தின்மேலாம்
விரித்திடும் பலமும் நூறு மடங்குாய விளம்பும் மாதோ.

என்ற பாடலும் - சிவபுண்ணிய சீலர்களின் செயல்பாட்டைக் குறிப்பன.

இன்று பஞ்சாக்கை வைப்புத்தல வழிபாடு மட்டும் தான் தொடக்கப்பட்டது. இடிபாடுகள் முற்றும் நீக்கிச் சிறிய அளவிலாவது திருக்கோயில் அமைக்கப்பட வேண்டும். அப்பகுதி மக்கள் முயன்றால் - முன்னின்று திருப்பணி செய்தலில் ஆர்வங்காட்டினால் குருமணி அவர்கள் நல்லாசி வழங்கி துணை நின்று உலகம் உய்யச் செய்வார்கள். குருவழி சென்று நலம்பல பெறுவோம்.

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

தருமபுரம்.

(மலர் 48, இதழ் 6, பக்கம் 806 இன் தொடர்ச்சி.)

மொழித்திறம் போற்றல் :

முன்னோர் மொழியை அப்படியே ஆளுதல் என்பது ஒரு பண்பாடு. சிந்தாமணிச் சொற்களைப் பல விடங்களில் கம்பர் அப்படியே ஆளுகின்றார். சில இடங்களை இக்கட்டுரை காட்டுகிறது.

ஓசனை :

யோசனை என்றும் காவதம் (காதம்) என்றும் தொலைவைக் குறிக்கும் சொற்களை இலக்கியங்களில் பார்க்கலாம். 'ஓசனை' என்பதை (சிந். 836) சிந்தாமணி ஆளுகிறது. கம்பரும 'ஓசனை பல கடந்து' (கம். 218) என்றே குறிக்கிறார்.

பிச்சம் :

'பீலிபால் புனையப்படுவது. குடையும் பிச்சமும்ஒழிய' (சிந்.416) என்றார். கம்பர் தசரதன் கூற்றில,

பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்னிழல்
நிச்சயம் அன்றெனின் (கம். 1888)

என்று அமைப்பார்.

செம்பிட்ட இஞ்சி :

கோட்டை மதில் செம்பால் செய்யப்பட்டு உறுதிபெற்று இருந்ததைச் 'செம்பு கொண்டன்ன இஞ்சித்திருநகர்' என்று (சிந். 489) சிந்தாமணி காட்டும்.

கம்பர் இதனைச் 'செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்' – (கம். 7431) என்றார்.

வாளரம் :

ஒளிபிறந்தது அரம். கண்ணின் ஒளியும் அழகும் இதனை விஞ்சியதாகக் கூறுவது கவிமரபு.

'வாளரம் துடைத்த வைவேல் விரண்டுடன்.' (சிந். 461)

கம்பர் காவியத்தில் 'வாளரம் பொருத வேல்' (கம். 493) என்ற அதே ஆளுமை இடம்பெறுகிறது.

ஆடு :

வெற்றி என்றபொருளுடையது. ஆடு ஆடு என்பர் ஒருசாரோர் என்பது புறநானூறு (85). கொடியோடு சேரும்போது அசைவது என்ற பொருளையும் பெறும்.

'ஆடு கொடியுச்சி' (சிந். 501)

கம்பர் 'ஆடுகொடிப்படை சாடி அறத்தவரே ஆள... .....' நாடு கொடுப்பேன் என்று (கம். 2324) குகன் கூற்றில் அமைப்பார்.

யாக்கை நிலையாமை :

நீர்மேல் மழைத்துளி விழும்போது காற்றுக் கொப்புளங்கள் தோன்றுவதும் உடன் மறைவதும் நாம் பார்த்ததுதான். இப்படித் தான் யாக்கையும் நிலையாமை உடையது என்பதை இதன் மூலமாகச் சிந்தாமணி உணர்த்துகிறது. அச்சணந்தி ஆசையை விட்டு நோற்று மறைந்தபோது 'மாரிமொக்குளின் மாய்ந்து' - என்று (சிந். 409) தேவர் காட்டுவார்.

கம்பர் - இராவணன் இந்திரஜித்திடம் கூறுவதாக இதே உவமையை ஆண்டுள்ளார்.

மிதுஎழும் மொக்குள் அன்ன யாக்கையை விடுவது அல்லால்
சிறையை விடுவது உண்டோ. (கம். 9124)

மத்தெறி தயிர் :

மத்து தயிரைக் கலக்கும் திறம் - வீரனின் வினைக்கு உவமையாகும்.

ஆயர்கள் தங்கள் ஆனிரைகளைக் காக்கவியலாமல் பின்வாங்க - வேடர்கள் அடர்த்தனர். மாரிபோல் பகழி சிந்தக்கண்ட ஆயர்கள் 'மத்தெறி தயிரினுயினர்.' (சிந். 421) கம்பர் - சம்பரன் உடலைக் கலக்கியமைக்கு இதே உவமையை எடுத்தாண்டார். தசரதன் அவனை வென்ற பெருமை கொண்டான். 'தயிர் உடைக்கும் மத்து என்ன உலைவுறச் சம்பரன்' (கம். 2712) என்பது கம்பர் வாக்கு.

நிமித்த நம்பிக்கை :

புட்குரல் கேட்டு - நிமித்தம் காண்பது பண்டைய மரபு. இதனைச் சிந்தாமணி கூறுகிறது. நிரை கொள்ள எழுந்தபோது - நிமித்திகன் ஒருவன்.

" அடைதும்நாம் திரை ... கோள்படை உடையும் " (சிந்.416) என்று அறிவுறுத்தினுன்.

திருமணமாகித் திரும்புங்காலை - பரசுராமன் எதிர்ப்படும் முன்பாகப் பறவைகள் இடவலமாகச் சென்று தீ நிமித்தம் காட்டிய தாகவும் - நிமித்திகன் அதன் பலன் கூறுவதாகவும், கம்பர் - காவியம் இயம்புகிறது.

மயில் வலமாக, காகம் முதலியன இடமாகத் திரிவது கண்டு 'இன்றேவரும் இடையூறு, அது நன்ருய்விடும்' என்ருன் நிமித்திகன். (கம். 1268)

காமவேகம் :

நீருள் குளிப்பினும் குன்றேறி ஒளிப்பினும் காம இவப்பம் அருது என்பது தெரிந்தது. பின்னும் அது வேகமும் உடையது என்பதைக் குறிக்கிறது சிந்தாமணி.

திரை கவர வந்த வேடர்கள்மேல் சென்ற சீவகனின் தேர்.
'கார் விரி மின்னனுர்மேற் காமுகர் நெஞ்சின் ஓடும்' (சிந். 442)

என்றது முந்துநூற் செய்தி.

கம்பர் - வாக்கு காமுகர் பார்வை - பொருளில்லாதவளுக இருந்தால் வேகத்துடன் வறிதாகவும் மீளும்என்பதாக அறிவுறுத்து கிறது. இராவணன் வேல் சடாயுவைத் தாக்க முடியாமல் வறிதே மீண்ட இடத்தில் சிந்தாமணிக் கருத்து புதிய வடிவத்தைக் கொள்கிறது.

பொன்னேக்கியர் தம் புலன் நோக்கிய புன்கண்ணேரும்
.... ஆம்என மீண்ட தவ்வேல். (கம். 3435)

புள்ளுக்கு அடங்கும் நாகம் :

வலியவனுக்கு வலியான் இவ்வையகத்தில் உண்டுதானே! தானிலத்தையே நடுங்க வைக்கும் நாகம் ஆழியான் ஊர்திப் புள்ளிற்கு அடங்கிப்போகும்.

ஆனிரை கவரவந்த வேடர்கள் சீவகனின் தேரொலி கேட்டு ஊக்கம் சுருங்கினர்.

ஆழியா னூர்திப் புள்ளி னஞ்சிற கொலியி னுகம்
மாழ்கிப் பையவிந்த வண்ணம் (சிந். 449)

ஆயிற்று என்பது சிந்தாமணி.

கம்பர் - இதே செய்தியை நாகபாசப் படலத்தில் இந்திர சித்தனின் நாகபாசம் - கருடன்வர விலகியது என்பதாகக் கூறினர். அத்துடன் தம் நன்றியறிதலைக் காட்டவும் அங்கே அவர் தவற வில்லை.

உலகேழும் மூடும் சிறையானும் கருடன்வர பதகன் துரந்த உரகம் அகன்றது.

வெண்ணெய் (ஊர்) அணுகும் அறிவாளர் பசி அகலுவதுபோல் அகன்றது என்றுகூறித் தம் புலமை நலங்காட்டினர்.

தேசம் கலந்த மறைவாணர் செஞ்சொல்
அறிவாளர் என்றிம் முதலோர்
வாசம் கலந்த பசிபோல் அகன்ற
பதகன் துரந்த உரகம். (கம். 8264)

சிந்தாமணி காட்டும் ஒளி - கம்பர் கவிதைகளில் ஊடுருவிய பாங்கு சுவை தருவதாகவே இருக்கிறது.

(வளரும்)

சிவலிங்கம்

சிவபெருமானுக்குரிய திருமேனிகள் மூன்று. அவை அருவம், உருவம், அருவுருவம் எனப்படும். அருவத்திருமேனி உருவமற்ற வடிவாகும். அகத்தில் கண் கொண்டு உள்நோக்கி உணரும் யோகிகளின் நோக்கிற்குமட்டுமே அவ்வடிவம் புலப்படும். உருவத் திருமேனி கை, கால் முதலிய அவயவங்களுடன் கூடிய வடிவ மாகும். அருவுருவத் திருமேனி உருவத்திற்குவேண்டிய கை, கால் முதலிய அவைபங்கள் இல்லாமையால் அருவமாயும், கண்களால் காணவும் கைகளால் தொடவும் கூடியதாயிருத்தலின் உருவ மாயும், இருநிலைகளும் விரவப்பெற்றவடிவமாகும். சிவாலயத்துள் சிவலிங்கம் அருவுருவத் திருமேனியாகவும், சிவபிரான் கொண் டருளிய பல்வேறு வடிவங்கள் உருவத் திருமேனிகளாகவும் விளங்குகின்றன. இலிங்கம் என்பதற்குச் சித்தரித்தல் என்பது பொருள். லிங் - லயம் - கம் - தோற்றம். சங்கார காலத்தில் பிரபஞ்சங்கள் ஓடுங்கியபின் சிருஷ்டி காலத்தில் அதனின்றும் உலகம் தோன்றும் எனப்படுதலினல் இலிங்கம் என்பதற்குப் பண்டைப்பு முதலியவற்றுல் உலகைச் சித்தரித்தல் என்ற பொருள் ஏற்புடையாதலை உணரலாம்.

— திரு. வி. சா. கு.

இறை உணர்வு

திரு. சு. முருகையன், எம். ஏ.,
வருவாய்க் கோட்டாட்சியர், மயிலாடுதுறை.

சமயமும் மனிதனும் :

சமயம் மனித வாழ்க்கைக்கு அவசியமானது. மக்கட்பண்பை மேம்படுத்துவது. மக்களின் வாழ்வு நெறிக்கு விளக்கானது. மனிதனது பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் வித்தானது. மனித பாரம்பரியத்தில் ஊன்றியிருப்பதும் சமயம்.

நமது இந்திய கலாசாரம், பண்பாடு, சமுதாய வாழ்வு ஆகியவற்றில் மதத்தின் சாரம்சக் கொள்கைகள் மிளிர்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் ஒரு பரம்பொருளைச் சுற்றியே உலக வாழ்வு இயங்குகிறது. பகவத்கீதையின் அடிப்படைத் தத்துவத்தை சமயம் என்ற உணர்வு நிலையில் பற்றுக்கொண்டு நாம் காணலாம்.

வள்ளுவர் சொன்னார் :-

"கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

அதாவது கற்றவர்க்குக் கல்வியினால் பெறப்பட்ட அறிவு மட்டும் இருந்து பயனில்லை. மனிதனை மனிதனாக்கான அவனுக்கு இன்னொரு தகுதி வேண்டும். அதுதான் இறையுணர்வு. இதை உணர்த்து முகமாகத் தான் தமிழ்ச் சான்றோர் திரு. வி. க. ஒரு கேள்வி எழுப்புகிறார். "மக்களை மாக்களினின்று வேறுபடுத்துவது யாது?" என்று.

'அது கடவுள் உணர்வுதான்!'

ஆகவே இறையுணர்விலிருந்துதான் மற்ற பண்பாட்டு நெறிகள் ஊற்றெடுக்கின்றன என்பது தெளிவு. இந்த இறையுணர்வினால் என்ன பயன்?

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர்
புகழ்புரிந்தார் மாட்டு."

என்று வள்ளுவர் அழகாகச் சொல்கிறார்.

இருவினை என வள்ளுவர் சொன்னது இன்ப - துன்பமென்னும் நிலைகளைத்தான். இதை மனிதன் உள்ளத்தளவிலே வாழும் உணர்வுக் கொள்கை நிலைதான்.

தெய்வத்தன்மை :

அடுத்து ஒரு மனிதன் தெய்வத்தன்மை பெறுவது எப்போது?

"அஞ்சும் அடக்கடக்கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதனம் ஆகுமென்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே"

என்றார் திருமூலர்.

ஐம்புலன்களை முற்றிலுமாக அடக்க முனைவதில் அர்த்தமில்லை. ஐம்புலன்களையும் நெறிப்படுத்தி வாழ்தலே முறையானது என்று தெரிவிக்கிறார் திருமூலர்.

எப்பொருளிலும் தங்குகிற இறைவனை நாம் நாடுங்கால் நம்மிடம் உள்ள வினைகள் தகர்க்கப்படுகின்றன.

சடகோபர் அருளுகிறார் :-

"ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதுமோர் பற்றில்லாத
பாவனை யதனைக் கூடில்
அவனையும் கூடலாமே."

இதன் சாராம்சம் "உடம்பிலுள்ள உயிர் எவ்வித விகாரமும் அடைவதில்லை எனத்தெரிந்தால் நாம் இறைவனை அறியமுடியும்" எனக் கூறுகிறார்.

இறைவன் எங்கும் விரவியுள்ள நிலையினைக் கம்பர் சொல்வார் :

"சாணிலும் உளன்; மற்றுங்கோர்
அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக்
குன்றிலும் உளன்; இந்நின்ற
தூணிலும் உளன்; யான் சொன்ன
சொல்லினும் உளன்."

இவ்வாறு எல்லாப்பொருளிலும் நிறைந்த, தனக்கு ஈடில்லாத காலங்கடந்த சோதி மயமான அருட்பிழம்பான அண்ணல் நாம் நினைக்குந்தோறும் நாம் நினைத்தவாறே அன்பு பெருக்கி நம்மை யாட்கொள்ள அந்த வடிவிலே தோன்றுதல் இயல்பு.

அனுபவநிலை :

இந்த நிலையிலே சுந்தரர்க்குத் தாண்டவக்கோலத்தில் காட்சி யளித்த பெருமானைச் சேக்கிழார் பெருந்தகை பின்வரும் பாடலில் வருணிக்கிறார். சுந்தரர் இறைவனுடைய நடனக் கோலத்தைக் கண்டபோது அவருக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியை அளவிட்டு உரைக்க முடியாது எனச் சேக்கிழார் ஏத்தும் பாடல் இதுதான்.

" தாண்டவம் புரியும் தம்பிரானரைத்
தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகையாருக்கு அடுத்த அந்நிலைமை
விளைவையார் அளவறிந்து உரைப்பார். "

இப்பாடலில் சுந்தரர் பெற்ற இன்ப நிலையைத் தான் விவரிக்க இயலாது என மிக நேர்த்தியாகப் புனைகிறார். ஆனால் திருவாய் மொழியில் பக்தர் இறைவனையுணர்ந்து இன்புற்ற நிலையை,

" வாரா வருவாய் வருமென் மாயாமூர்த்தியாய்
ஆராவமுதாய் அடியேன் ஆவியகமே தித்திப்பாய் "

என விவரிக்கிறார்.

சைவ சமயத்தின் மையக்கருத்தாக விளங்குவது அன்பே சிவம் என்ற இயைபு நிலைதான். இதை அறிவிக்கவே

" அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார் "

என்று பகர்ந்தார் திருமூலர்.

தொகுப்புரை :

மனிதனுக்கு மதம் மொழி என்ற இரண்டும் கண்கள். வாழ்வு நெறியையும் சிறப்பையும் இவை உணர்த்துகின்றன. கடவுளுடன் காதலாகிக் கசிந்துகண்ணீர்மல்கிப் புலன்களை நெறிப்படுத்துவதால் அறம் வளர்வதுடன் தன்னையுணருந்திறமும் தன்னையுணர்ந்து தனது ஒப்பிலா அப்பனையும், அம்மையையும் அம்மையே அப்பா என வாழ்த்த வழிபிறக்கும். வாழ்விக்கும் ஞானமூர்த்தியைத் தரிசிக்க வழி ஏற்படுகிறது. இந்த நெறியை நாம் காணுமுகமாக வளர்ந்த சமய இலக்கியச் சுவைததும்பும் செம்மையான இலக்கியக் கருவூலங்களிலுள்ள பொருள்களை நாடித்துய்த்து நாம் இன்புற் திருக்க வேண்டும்.

கட்டுரை எண். 17.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

இறைவனின் வடிவம் மாயா காரியமா?

இறைவன், யோகசித்தர் விரும்பிய வடிவத்தைக் கொள்வது போலத் தானும் கொள்வன் எனில், அவனும் யோகசித்தருள் ஒருவனாக ஆவான் என்னும் கருத்துவருகிறது. அது பொருந்தாது. ஏனெனில், யோகசித்தர், தாம் விரும்பிய வடிவத்தைக்கொள்வதும் கூட இறைவனின் அருளாலே ஆகும். மேலும், யோகசித்தர் எடுக்கும் வடிவம் மாயா காரியமாகும். (இறைவன் எடுக்கும் வடிவம் மாயா காரியம் அன்று.) இக்கருத்துக்களைச் சிவஞான சித்தியார்,

“ வித்தக யோக சித்தர் வேண்டுருக் கொள்ளுமாபோல்
உத்தமன் கொள்வது என்னின் அவர்களில் ஒருவன் ஆவன்
அத்தகைய வர்களெல்லாம் ஆக்குவது அருளால் ஆங்கு
வைத்தது மாயை என்னின் வடிவெலாம் மாயை யாமே ”

என்னும் பாடல் கூறுகிறது.

சக்தி காரியமே வடிவம் :

இவ்விடத்து ஒருகேள்வி எழுகிறது. யோகசித்தர் மேற் கொள்ளும் வடிவம் மாயாகாரியம் எனில், இறைவன் எடுக்கும் வடிவம் எதன் காரியம் என்பதாகும். இறைவனின் வடிவம் சக்தி காரியமான வடிவம் ஆகும். ஏனெனில், மாயாகாரிய வடிவங் களுக்குக் காரணமாக இலங்குவது ஆணவ மலமாகும். அது சிற்றறிவையும் சிறுதொழிலையும் உண்டாக்கும். உயிர்கள் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையன ஆதலின் அவைகள் மாயா காரிய வடிவங்களால் ஆயின என்பது பொருந்தும். ஆனால் இறைவன் முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடையன் ஆதலின் அவனுக்கு மாயா காரிய வடிவம் பொருந்தாது. எனவே அவனின் வடிவம் சக்திகாரியமானது எனலாம்.

" மாயை தான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவமாகும்
ஆயவா ணவமகன்ற அறிவொடு தொழிலையார்க்கும்
நாயகன் எல்லா ஞானத் தொழில் முதல்நண்ணவாலே
காயமோ மாயை யன்று காண்பது சக்தி தன்னால் "

இப்பாடல் மேற்சொன்ன கருத்துக்களை விளக்குகிறது.

பரிணமித்து அழிதல் உண்டா?

இவ்விடத்துப் பிறிதொரு கேள்வி எழுகிறது. இறைவனுக்குச் சக்தியே வடிவம் எனில், வடிவப் பொருள்கள் யாவும் பரிணமித்து, அழிவை அடைவன என்னும் இலக்கணம், இறைவனின் வடிவத்திற்கும் பொருந்துமோ என்பதே அது. பரிணமித்து அழிதல் ஆறு அத்துவாக்கள் உட்பட்ட பொருள்களின் இயல்பாகும். இறைவன் ஆறு அத்துவாக்களையும் கடந்தவன் ஆதலின் பரிணமித்து அழிதல் என்னும் குற்றம் அவ்வடிவத்திற்குப் பொருந்தாது. இக்கருத்துக்களைக் கீழ்வரும் பாடல் தெளிவிக்கிறது.

" சக்தியே வடிவு என்றாலும் தான்பரிணாம மாகும்
நித்தமோ அழியும் அத்தால் நின்மலன் அருவே என்னின்
அத்துவ மார்க்கத் துள்ளான் அலன் இவன் அருமை தன்னைப்
புத்தி தானுடைமை போல இருந்தனை புகலக் கேள்நீ "

அருவமா? உருவமா?

இனி, சிவஞானசித்தியாரின் ஆசிரியர், இறைவன் உருவமா? அருவமா? என்னும் கேள்வியை எழுப்பிக்கொண்டு, தொடர்ந்து நான்கு பாடல்களில் பல்வேறு விளக்கங்கள் தருகின்றார்.

பொதுவாக உலகத்துப் பொருள்கள் உருவமும் அருவமும் ஆக இருக்கும். ஒன்று மற்றொன்றின் இயல்புடையதாகமாட்டாது. ஆதலால் முதல்வன் அருவப்பொருளே என்னின், அருவுருவமும் உருவமுமாகிய இயல்பை உடையவன் ஆக மாட்டான் எனப் பட்டு, உலகத்துப் பொருள்களுள் ஒருவனாய் முடிவன்; அந்நிலையில் இறைவன் உருவமல்லன்; அருவமே என்று முடிவாகக் கூறி விடலாமா? என்னும் கேள்வியை எழுப்பிக் கொள்கிறார் ஆசிரியர்.

" உலகினில் பதார்த்தமெல்லாம் உருவமோடு அருவமாகி
நிலவிடும் ஒன்று ஒன்றாகா நின்றஅந்நிலையே போல
அலகிலா அறிவன் தானும் அருவமே என்னின் ஆய்ந்து
குலவிய பதார்த்தத்து ஒன்றாய்க் கூடுவன் குறித்திடாயே "

என்பது அக்கருத்தமைந்த பாடல். இக்கேள்விக்கு, இனி, விடை தருகின்றார்.

அருவமே எனல் ஆகாது :

முதல்வன் உலகப் பொருள்களின் இயல்பை உடையன் அல்லன் ஆதலாலும் தோற்ற நாசங்கள் இலன் ஆதலாலும் அளந்து அறியப்படாதவன் ஆதலாலும் இன்ன வடிவினன் என்றும், இன்ன வடிவத்தைக் கொள்ளுவன் என்றும் இன்ன வடிவத்தைக் கொள்ளமாட்டான் என்றும் கூறுதல் அரிதாகும். ஆதலால் இறைவனது வடிவம் அருவமே என்றல் பொருந்துமாறில்லை.

மேலும் அளவிலாற்றலும் முற்றறிவு முற்றுத்தொழில்களும் இயல்பாகவே பாசத்தின் நீங்கிய தன்மையும் உடையன் ஆதலால் தான் நினைத்ததொரு திருமேனியை எடுத்துக் கொள்ளும் இயல்புடையன். ஆதலால் அவனது திருமேனி அருவமே என்றல் பொருந்தாது. மேலும் உருவத்திருமேனி கொண்டு வேதாகமங்களை உபதேசித்திலன் ஆயின் உயிர்கள் வீடு பேறு அடைதல் இயலாதாகும். அன்றியும் குருபரம்பரையாக அவை உபதேசிக்கப் பட்டுவருதலும் இல்லையாகிப்போகும். ஆதலால் இறைவனது திருமேனி அருவமே என்றல் பொருந்தாது.

" பந்தமும் வீடுமாய பதபதர்த்தங்கள் அல்லால்
அந்தமும் ஆதிஇல்லா அளப்பிலன் ஆதலாலே
எந்தைதான் இன்னன் என்றும் இன்னதாம்இன்னதாகி
வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற்றம்இன்றே "

" குறித்தது ஒன்றுகமாட்டாக் குறைவிலன் ஆதலாலும்
நெறிப்பட நிறைந்தஞானத் தொழிலுடை நிலைமையாலும்
வெறுப்பொடு விருப்புத்தன்பால் மேவுதல் இலாமையாலும்
நிறுத்திடு நினைந்தமேனி நின்மலன் அருளினாலே "

" ஆரணமா கமங்கள் அருளினல் உருவுகொண்டு
காரணன் அருளாகுகில் கதிப்பவர் இல்லையாகும்
நாரணன் முதலாயுள்ள சுரர்நரர் நாகர்க்கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றிடாவே "

என்பன அக்கருத்தமைந்த பாடல்களாகும்.

(தொடரும்)

போய்யடிமை இல்லாத புலவர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 7—5—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

அன்று முதல் ஞாயிறு! அடியேன் சிந்தனை சிறகடித்தது. ஆம்! தருமையின் பெருமைகளை எண்ணி எண்ணி மனம் சிலிர்த்தேன்! தமிழ் வளர்க்கும் ஞானப் பண்ணையல்லவா இது! வடமொழியும் தென்தமிழும் இங்கே பீடுநடையிடுவதை அறியாதார் யாவர்? சீரிய திருக்கோயில் பரிபாலனம், சிவாகமச் செந்நெறி சிறிதும் வழுவாத வழிபாடு, சமுதாயப் பணிகள் இப்படி நானூற்றைம்பது ஆண்டுக் காலமாக ஆற்றிவரும் அருமை, பெருமை எண்ணிப் பெருமிதம் கொண்டவாறே திருமடம் அடைந்தேன். காலை மணி 10.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் சொக்கநாதர் பூசை நிறைவித்துச் சித்திராசனத்தில் எழுந்தருளியிருந்து நாள்தோறும் ஆற்றும் திருமுறைப் பாராயணமும் ஆயிற்று. 'அரகர மகாதேவா' என்ற இறைமுழக்கமும் எழுந்தது. அன்பர்கள் ஒருவர்பின் ஒருவராகச் சென்று வழிபட்டுத் திருநீறுபெற்று அணிந்து மகிழ்ந்தனர்; பச்சைக் கம்பள விரிப்பில் அமர்ந்தனர்.

திருமுறை இன்னிசை, நாமாவளியை அடுத்துக் குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள். முதலில் மாதச் சிறப்புத் திருநாள்களைக்குறிப்பிட்டு, அந்நாட்களைக் கொண்டாட வேண்டிய தின் இன்றியமையாமையைத் தத்துவ நோக்கோடு புலப்படுத்தி னார்கள். சிவபூஜை, குருபூஜை, மாகேசுவரபூஜைச் சிறப்புக்களை உளம்கொளத் தெளிவித்தார்கள். அடுத்து, திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகப் 'பொய்யடிமை இல்லாதபுலவர்' புராண உபதேசம் செய்தருளினார்கள். பொய்யடிமை இல்லாத நிலை என்பது மெய்யடிமைத் திறம் என்பதைத் திருஞானசம்பந்தர் திருவாக்குக்கொண்டு விளக்கியமை சீரிய மேற்கோளாக அமைந்தது. "பொய்மொழியா மறையோர்கள்" என்று எதிர் மறையிலும் இக்கருத்தையே 'மெய்மொழி நான்மறையோர்'

என உடன்பாட்டிலுமாக ஞானசம்பந்தரின் சொற்றொடர் ஆட்சியைக் குறிப்பிட்டார்கள். இப்புராணப் பகுதியைச் சீரிய ஆய்வுரையாக நிகழ்த்தித் தொகையடியார் சிறப்பு உணர்த்தி உய்வித்தார்கள்.

'பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்' என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் பாடினார். மெய்யடிமைத் திறத்தால் சிவபெருமான் திருவடிக்கீழ் பதித்த நெஞ்சத்தோடு இறைவனைப் போற்றிப்பாடிய புலவர்களை இங்ஙனம் சுந்தரர் தொகுத்துச் சிறப்பித்தார்.

பொய்யடிமை இல்லாத புலவர் என்னும் தொடர், தொகை அடியார்களைக் குறிப்பது என்பதை மனங்கொள விளக்கினார்கள் புலவன், ஒருமை புலவர், பன்மை. புலவர்+கு=புலவர்க்கு எனவும் புலவன்+கு=புலவற்கு எனவும் புணரும். சிலர் புலவற்கு எனக் கொண்டு தனி அடியாராகவும் கூறுவர். இது பொருந்தாது. தில்லைவாழந்தணர், பொய்யடிமை இல்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், திருவாரூர்ப் பிறந்தார், அப்பாலும் அடிச்சார்ந்தார் - இவர்களைத் தொகையடியார்கள் ஒன்பதின்மர் எனக்கொள்வது மரபாக இருந்துவரும் வழக்கு. ஸ்ரீ சுந்தரர் தனி அடியார் திருப்பெயர்களைக் குறித்துக்காட்டினார். திருப்பெயர்குறிப்பிடாமல் எந்தத் தனியடியாரும் அவரால் அருளப்பெறவில்லை.

மேலும் பொய்யடிமை இல்லாத புலவர் யார்? என்பதை விளக்கினார்கள். வகைநூல் அருளிய நம்பியாண்டார் நம்பிகள் தாம் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில் கபிலர், பரணர், நக்கீரர் முதலியசிவனடி பரவிப்பாடிய புலவர்களே பொய்யடிமை இல்லாத புலவர் என விளக்கினர் எனக்குறித்தருளிப் பாடலைச் சுட்டினார்கள்.

" தரணியில் பொய்ம்மை இலாத்தமிழ்ச் சங்க மதில் கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயும் திருவால வாயரன் சேவடிக்கே
பொருள் அமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே. "

என்பது அத்திருப்பாட்டு. அன்பர்க்கு அருள் செய்யும் அரன் திருவடிகளையே பாடுபொருளாகக்கொண்டு இன்பக்கவி பாடிய கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர் என்கிறார் நம்பியாண்டார் நம்பிகள்.

தெய்வக்கவி நலம் சான்ற சேக்கிழார் பெருமானும் விரி நூலாகிய பெரியபுராணத்தில்,

"செய்யுள் நிகழ்சொல் தெளிவும் செவ்விய நூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே எனத்துணிந்து விளங்கிஒளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை இல்லாத புலவர் எனப் புகழ்மிக்கார்."

எனப் பொய்யடிமை இல்லாத புலவர் என்னும் தொடருக்குப் பொருள் விளக்கம் அருளினார்.

பொய்யடிமை இல்லாத புலவர் யார்? என்பதைச் சேக்கிழார் அப்புராணத்தின் இரண்டாம் பாடலில் மேலும் சிறப்பாகக் குறிக்கிறார். சிவபெருமானை அன்றி, வேறு அழியக்கூடிய பொருள்களைப் பாடுபொருளாகக் கொள்ளாமல், தொண்டுநெறி தலைநின்று மெய்யடிமை உடையவராம் பெரும் புலவர் என்பது அவர் தரும் விளக்கம்.

பொய்யடிமை இல்லாத புலவர் என்னும் தொடர் மாணிக்கவாசகரைக் குறிப்பது என்பது சிலர் கருத்து. இது பொருந்தாது என்பதைக் குருமணிகள் பல ஆதாரங்களுடன் விளக்கினார்கள். தொகையடியார்களைப் பன்மை வாசகத்தால் குறிப்பிட்டார் ஸ்ரீ சுந்தரர்; தனியடியார்களின் திருபெயர்களை வெளிப்படையாகக் குறிப்பிட்டார் வேறு பொருள் கொள்ளும் வகையில் எந்தத் தனியடியாரையும் பொதுப் பொருள் தரும் சொல்லால் குறிக்கவில்லை. மேலும் நம்பியாண்டார் நம்பிகளும் சேக்கிழாரும் அங்ஙனம் கருதவில்லை என்பதையும் அவர்களின் திருப்பாடல்களை அருளி உறுதிப்படுத்தினார்கள். இனி, வரலாற்று அடிப்படையில் பார்க்கும் போதும் சேக்கிழார், பொய்யடிமை இல்லாத புலவர் மணிவாசகர் எனக் கருதவில்லை எனலாம், எனக்குறிப்புணர்த்தினார்கள்.

சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தவர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இவன் காலம் கி.பி. 1133 முதல் 1150 வரை என்பர். சேக்கிழார் இவன் காலத்துக்குப் பின்னும் வாழ்ந்தவர். இரண்டாம் குலோத்துங்கனின் மகன் ராசராசன் II. இவன் காலத்தில் கி. பி. 1163இல் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர் மாதேவடிகள் இராமதேவனை, உத்தமசோழப் பல்லவரையன் திருமழபாடித் திருக்கோயிலுக்கு நிவந்தம் அளித்ததாக அங்குள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இதில் குறித்த இராமதேவன் என்பது சேக்கிழாரின் இயற்பெயர். உத்தமசோழப்

பல்லவரையன் என்பது பட்டப்பெயர். மாதேவடிகள் சிறப்புப் பெயர். எனவே சேக்கிழார் இராசராசன் காலத்தில் வாழ்ந்தவர் என்பது தெளிவாகின்றது.

இராசராசன் கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் நான்கு கல் தொலைவில் ஒரு திருக்கோயில் எழுப்பினன். அதுவே கலைச் சிறப்போடு காட்சிதரும் தாராசுரத்து இராஜராஜேச்சரம். இக் கோயிலின் கர்ப்பக்கிருகப் புறச்சுவரில் திருத்தொண்டத்தொகை அடிப்படையில் நாயன்மார்களின் வரலாறுகளைத் தனித்தனிப் புடைப்புச் சிற்பங்களாக அமைத்தான். ஒவ்வொரு சிற்பத்தின் மேற்பகுதியிலும் நாயன்மார்களின் திருப்பெயரும் பொறித்தான். இச்சிற்பங்களை அமைக்க அவ்வரசன் காலத்தில் வாழ்ந்த சேக்கிழார் அரசனுக்குத் துணையாக இருந்திருப்பார் என்பதற்குக் காரணங்கள் காட்டத் தேவையில்லை. இச்சிற்பங்களுள் "பொய்யடிமை இல்லாத புலவர்" என்ற பகுதியில் சிவனடியார் மூவர் நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளது இதனைக் கூர்ந்து நோக்கும்போது "பொய்யடிமை இல்லாத புலவர்" ஒருவர் அல்லர் என்பதும் மேலும் இத்தொடர் மாணிக்கவாசகரைக் குறியாது என்பதும் நன்கு புலனாகின்றது.

எனவே, சிவபெருமானை நினைந்து தொழுது தோத்திரம் செய்து அவனையே பாடுபொருளாக்கொண்டு கவிபாடிய புலவர்களையே இத்தொடர் குறிக்கும் என்பது தெற்றென விளங்கும் இங்ஙனம் தக்க ஆதாரங்களுடன் புராண உபதேசம் அருளிய குருமணிகள் இடையிடையே புராணத்தொடர்பு விளங்கத் திருமுறை, மற்றும் சாத்திரக் கருத்துக்களைப் புலப்படுத்தி மேற்கோள்காட்டி அருளினர்கள்

திருநீலகண்டர் முதல் திருநீலகண்டயாழ்ப்பாணர் முடிய அறுபதின்மர் தனியடியார்கள் எனப்பெறுவர். சுந்தரர், அவர் தம் தந்தையார் சடையனர், தாயார் இசைஞானியார் மூவரும் தனியடியார்களில் சேர்த்து நாயன்மார் அறுபத்துமூவர் எனப் போற்றப் பெறுகின்றனர். தில்லைவாழந்தணர் முதல் ப்பாலும் அடிச்சார்ந்தார் முடிய உள்ள ஒன்பது வகையான அடியவர்கள் ஒருவரல்லர். பலராவர். அவர்கட்குத் தனித்தனி உருவங்கள் எல்லாக்கோயில்களிலும் உள்ளன. ஆனல் அவர்களில் ஒவ்வொரு தொகுதியினரும் பலராகலின் அவர்கட்குத் தனி உருவம் அமைப்பது பொருந்தாது என்றெண்ணிய நமது முன்னோர் ஒவ்வொரு தொகுதியினருக்கும் ஒவ்வொரு சிவலிங்கமாக ஒன்பது சிவலிங்கத் திருமேனிகளைத் தில்லைத் திருக்கோயிலில் சிவகங்கைத்

தீர்த்தத்தின் வடமேற் பகுதியில் பாண்டிநாயகத்தின் எதிரில் எழுந்தருள்வித்துள்ளனர். இது நவலிங்கம் கோயில் என அன்று வழங்கியது. இன்று நவக்கிரகக்கோயில் என வழங்குகிறது. இது தவறு. நவலிங்கம்கோயில் தொகையடியார் கோயிலே என்பதைத் தில்லைக்கோயில் கல்வெட்டு ஒன்று மெய்ப்பிக்கிறது என்று தொகையடியார் கோயில்பற்றிய அரிய ஆய்வு விளக்கமும் தந்தருளினார்கள்.

இனிய அருளுபதேசம் நிறைந்தது. குளர்ச்சியான கனிச்சாறு கிடைத்தது. தாகம் தணிந்தது. ஆராய்ச்சிக் கருத்துக்களை - புதிய சிந்தனைகளை ஏந்தியவாறு இல்லம் ஏகினோம்.

'மெய்யடியார் திறம் அருளி மேதினிக்கு வழிகாட்டி
உய்விக்கும் குருமணிதாள் உவந்தேத்திச் சிறப்புறுவோம்!

வாழ்க குருமணிகள் !

"ஞானசமபந்தம்"

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திலிருந்து வெளி வருவது திருமுறைகள், சாத்திரங்கள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகளை அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	.... ரூ.	17–00
ஆண்டுச் சந்தா (சலோனை)	.... ரூ.	45–00
ஆயுள் சந்தா (உள்நாடு)	.... ரூ	175–00
ஆயுள் சந்தா (வெளிநாடு)	.... ரூ.	450–00
தனிப் பிரதி விலை	... ரூ.	1–50

முகவரி:- செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம்,
மயிலாடுதுறை - 609 001, தஞ்சை மாவட்டம்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவாரவைப்புத்தலச் சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன. சுக்கில-வைகாசி-ஆயில்ய நாள் வழிபாடு 9—6—89 அன்று பேராவூர், மருத்துவக்குடி (இடைக்குளம்) ஆகிய தலங்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வைப்புத்தலங்களாக விளங்கும் இத்தலங்களின் சிறப்புப்பற்றித் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம்.ஏ., உரையாற்றினர். "பேராவூர், இடைக்குளம், சோமேச்சுரம், கருப்பூர், ஏமநல்லூர்த் தேவாரங்களும் தலச்சிறப்புக்களும்" என்ற நூல் வெளியிடப்பெற்றது. அன்பர்கள் வழிபட்டுப் பயனைபெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாதமுதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்கின்றது இம்மாதம் 96 ஆவது அருளுபதேசம் 4—6—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது.

திருத்தொண்டர் புராண உபதேசமாகப் புகழ்ச் சோழர், நரசிங்க முனையரையர், புராணங்களை உபதேசித்தார்கள். மெய்ப்பொருளார் 'பரவிய திருநீற்று அன்பு பாதுகாத்துய்ப்பீர்' என்று தம் ஆயத்தார்க்கும், உறவினர்க்கும் உபதேசித்தார்; புகழ்ச் சோழர் அந்நெறியை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு செயலில் காட்டினர் - என ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் புராண ஒப்பீடு செய்து தெறிப்படுத்திஞர்கள். சைவசித்தாந்தச் செந்நெறி விளக்கித் திருமுறைச் சான்றுகளோடு அருளுபதேசம் செய்தருளினார்கள்.

தருமை ஆதீன அடியார்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள் அன்பர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். அடுத்து 97 ஆவது அருளுபதேசம் 2—7—89 அன்று நடைபெறும். அன்பர்கள் பயன் பெறுவார்களாக.

தருமை ஆதீனம்
ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழா

தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி எய்திய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 17—5—89 அன்று தொடங்கிப் பெருவிழா நிகழ்வுற்றது. நாள்தோறும் பஞ்சமூர்த்திகள் திருவீதி யுலாக்காட்சி நிகழ்ந்தது. திருவீதியுலாவின்போது ஆதீன வேத சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை ஆசிரியர்களும் மாணவர் களும் ஆதீன தேவஸ்தானஓதுவாமூர்த்திகளும் வேதபாராயணமும் திருமுறைப்பாராயணமும் நிகழ்த்தினர்கள். அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

குருபூஜைப் பெருவிழா :

தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப் பெருவிழா 26—5—89 வெள்ளிக்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவிலுள்ள குருமூர்த்தங்களை வழிபட்டு ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்தார்கள். நண்பகல் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனை, நவசக்தி அர்ச்சனை ஆகியவையும் சிறப்பாகநடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி, வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். திருவருட்செய்தி (மூன்றுப்தொகுதி) - (தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமணியின் அருளாசித் தொகுப்பு) என்றநூல் வெளியீடு பூஜையில் வைக்கப்பெற்றது. ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு நிறைவெய்தியபின் நண்பகல் மாகேசுவரபூஜை நிகழ் வுற்றது. குருபூஜை விழாவில் அன்பர்கள் பலரும் கலந்துகொண்டு வழிபட்டுப் பயனுற்றனர்.

குருமூர்த்த தரிசனம் :

குருபூஜைத் திருநாள் 26—5—89 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் மாலை 6-30 மணியளவில் நாதசுர இன்னிசை முழக்கத்துடன், திருமஞ்சன வீதியில் அமைந்திருக்கும் அண்மையில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற குருமூர்த்தங்களைத் தரிசித்து வழிபாடாற்ற எழுந்தருளினார்கள். குருமூர்த்த வழிபாட்டின்போது

ஒவ்வொரு குருமூர்த்தத்திலும் அருள்வரலாறு கூறப்பெற்றது. குருமூர்த்த வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீ தருமபுரேசுவரர் ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி, ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் களில் வழிபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குக் குருபூஜைத் திருநாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடுகள் திருமெய்ஞ்ஞான நிவேதனத்துடன் நிகழ்த்தப் பெற்றன. வழிபாட்டிற்குப் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்கொலு வீற்றிருந்து அருட் காட்சி வழங்கியருளினார்கள். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர் களும் அறிஞர் பெருமக்களும் அன்பர்களும் தரிசித்து அருட் பிரசாதம் பெற்றுய்ந்தனர்.

பட்டினப்பிரவேசம் :

27—5—89 சனிக்கிழமை பட்டினப்பிரவேசத் திருநாள். அன்று காலை 7 மணி அளவில் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சிவபூசகர்களின் சிவபூசை நடைபெற்றது. காலை 10 மணி அளவில் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. நண்பகல் மாகேசுவரபூஜை நடைபெற்றது. இரவு தருமை ஆதீன இசைப்புலவர், டாக்டர் திரு. சீகாழி கோ. சிவசிதம்பரம் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு பட்டினப்பிரவேசம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் சிவிகையை வலம் வந்து வழிபட்டு எழுந்தருளித் திருவுலாக் காட்சி தந்தருளினார்கள். தருமை ஆதீனத் திருக் கூட்டத்து அடியவர்களும், அறிஞர்களும், அன்பர்களும் உடன் வரத் திருவுலாக் காட்சி நடைபெற்றது. புகழ்பெற்ற கலைஞர்களின் நாதசுர இன்னிசையுடன் திருமுறை இன்னிசையும் முழங்கத் திருவீதியுலாக் காட்சி நிகழ்ந்தது. தருமை ஆதீனத் திருவீதிகளில் அன்பர்கள் பூரண கும்பங்கள் வைத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வழிபட்டு அருட்பிரசாதம் பெற்றனர். திருவுலாக்காட்சி நிறைவெய்தியதும் கொலுக்காட்சி நடைபெற்றது. அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியருளி, அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

தருமை ஆதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவையொட்டி 17—5—89 முதல் 27—5—89 வரை திருநெறியத் தெய்வத் தமிழ் மன்றத்தில் நாள்தோறும் மாலை 6-10 மணிக்குத் திருநெறிய தமிழ் மாநாடு நடைபெற்றது. திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு விழா நினைவாக நடைபெற்றது. காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 7—5—89 புதன்கிழமை முதல் திருநாளன்று மாலை விழாவைத் தொடக்கி வைத்து ஆசியருளினர்கள்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு, கருத்தரங்கம், பட்டி மன்றம், வழக்காடுமன்றம் முதலிய நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான், வித்துவான் ஸ்ரீமத். மௌன மகாலிங்கத் தம்பிரான், திரு. வி. ஆறுமுகப்பிள்ளை, (இ. ஆ. ப. ஓய்வு), டாக்டர் திரு. மு. சுவாமிநாதன், திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் ஐயர், செந்தமிழ்ப் புரவலர், திரு. இரா. இராஜசேகரன், திரு. இரா. சிவபுண்ணியம், திரு. எஸ். பாஸ்கரன், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, திரு. இரெ. பாலசுப்பிரமணியன், வித்துவான் திருமதி. ப. நீலா ஆகியோர் வரவேற்புரை வழங்கினர்.

தமிழக அரசு வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு கோ. சி. மணி, திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. எஸ். முத்துக்குமரன் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், மயிலாடுதுறை நகராட்சி ஆணையர், திரு இரா. வேலு, பி. ஏ. காஞ்சிபுரம், பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. பு. மா. ஜெயசெந்திலநாதன் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் ஆகியோர் தொடக்கவுரை, சிறப்புரை தலைமையுரை ஆற்றினர்.

டாக்டர் திரு. எஸ். என். கந்தசாமி, டாக்டர் திரு. என். ஆர். பட், திரு. தி. வே. கோபாலையர், திரு. சி. சு. மணி, திரு. டி. என். இராமச்சந்திரன், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, டாக்டர் திரு. த. அமிர்தலிங்கம், டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, டாக்டர் திரு. சு. சாமிஐயா, டாக்டர் கோமதிசூரியமூர்த்தி, இரா. செல்வநாயகம், புலவர் மு. வைத்தியநாதன், புலவர் திரு. ம. சிவசம்பு,

வித்துவான் திரு. தா. குருசாமிதேசிகர், டாக்டர் திரு. எஸ். கங்காதரன், டாக்டர் திரு. சு. சுவர்ணகாளீசுவரன் வித்துவான் திரு. சு. மு. சுந்தரராசன், திரு. இரா. மருதநாயகம், வித்துவான் திரு. நீ. சீ. சுந்தரராமன், திரு. பா. சிவனேசன், புலவர் திரு. கே. கணபதி ஆகியோர் விரிவுரைகள் ஆற்றினர். புலவர் திரு. கா. ம. கண்ணப்பன், திரு. தெ. இராசாமணி, திரு. சு. முத்துக்கிருஷ்ணன், டாக்டர் திரு. சி. சிவசங்கரன், திரு. கே. கணபதி, திரு. இரா. செல்வநாயகம் ஆகியோர் பட்டிமண்டப நிகழ்ச்சியில் உரை நிகழ்த்தினர். டாக்டர் திரு. நா. மெய்ப்பொருள், புலவர் திரு கா. ம. கண்ணப்பன் ஆகியோர் வழக்காடுமன்ற நிகழ்ச்சியில் உரை நிகழ்த்தனர்.

திருக்கல்யாணத் திருநாளன்று திருக்கோயிலில் ஆனந்த தாண்டவபுரம், வித்யா வாசஸ்பதி திரு. பி. இராமதாச ஐயர் திருமணத் தத்துவபற்றி உரை நிகழ்த்தினர்.

மயிலாடுதுறை ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சி, தஞ்சை ஹரிகதாசவாணி திருமதி. டி. ஆர். கமலாமூர்த்தியின், இன்னிசைவிரிவுரை, சென்னை, ஸ்ரீ மீனாட்சி நாடி சோதிடப, திரு. ஏ. நல்லகுருந்தப்ப சுவாமி குழுவினரின் தேவார இசை, மயிலாடுதுறை, கௌரி ஆறுமுகம் குழுவினரின் இன்னிசை, மயிலாடுதுறை ஸ்ரீ கணநாதர் பெரபமை நாடகசபையினரின், 'சிவசக்தி' பொம்மலாட்ட நிகழ்ச்சி, குடந்தை திரு. சந்தர்குழுவினரின் விகடநிகழ்ச்சி, பக்தித் திரைப்படநிகழ்ச்சி, திருமதி. உமாஆனந்த் குழுவினரின் நட்டுவாங்கத்துடன் சென்னை பரதநாட்டிய சூடாமணி, கலாரஞ்சனி, பரதகலாவல்லி, செல்வி. ஹிமஜா பாலசுப்பிரமணியம் பரதநாட்டிய நிகழ்ச்சி, மயிலாடுதுறை அறிவாலயம் மழலையா பள்ளி மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சி, கீழமணக்குடி திரு. மு. பச்சைமுத்து குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி, தருமை ஆதீன இசைப்புலவர் டாக்டர் திரு. சோ. சிவசிதம்பரம் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி ஆகியவை சிறப்பாக நடைபெற்றன.

ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் என வழங்கும் திருப்பெருமணநல்லூர் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழாவும் சிவஜோதி தரிசனமும், தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் 22—5—89 திங்கட்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றன.

தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. கே. கணபதி, பி. லிட்., பி. எட்., 'ஞானசம்பந்தர் அற்புதங்கள்' பற்றி உரையாற்றினர். அன்பர் பலர் ஜோதி தரிசனத்தில் பங்கு கொண்டு தரிசித்துப் பயன்பெற்றனர்.

ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை விழா

சமயாசாரியருள் ஒருவராகிய ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை விழா சுக்கில – வைகாசி – 10 ஆம் நாள் (23—5—89) செவ்வாய்க் கிழமை மாலை தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும், சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும், சிறப்பாக நடைபெற்றது. குருபூஜை விழாவினை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலுக்குக் காலை, மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., 'திருஞானசம்பந்தர் அற்புதங்கள்' பற்றி உரைநிகழ்த்தினர்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் சமயாசாரியர் சந்தானாசாரியர் சந்நிதியில் திருமுறைக்கலாநிதி திரு. ஆர். கனகசபை ஓதுவார் திருமுறைப்பண்ணிசை நிகழ்த்தினர். சிரோமணி, பிரமஸ்ரீ. ஐ ஆனந்த நடராஜ தீட்சிதர் தலைமையில் தருமபுரம், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., 'திருஞான சம்பந்தர் அருள்வரலாறும், அற்புதப் பதிகங்களும்' பற்றி உரை நிகழ்த்தினர் அன்பர்கள் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

வேளூரில் வசந்தோற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் நிகழும் சுக்கில ஆண்டு சித்திரைத் திங்கள் 28 ஆம் நாள் (11—5—89) வியாழக்கிழமை அன்று தொடங்கி வசந்தோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. இரண்டாம் திருநாள் முதல் பத்தாம் திருநாள் முடிய நாள்தோறும் சுவாமி, அம்பாள் புறப்பாடாகி வசந்தமண்டபத்தில் ஊஞ்சல் உற்சவம் நடைபெற்றது. அன்பர்கள் ஊஞ்சல் உற்சவத்தைத் தரிசித்துத் திருவருள் பெற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கிலஞு ஆனிமீ 1உ முதல் 31உ முடிய)

(15—6—89 முதல் 15—7—89 முடிய)

சுக்கிலஞு வைகாசிமீ 32உ புதவாரம் சுவாதி நக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரியன் உதயம் முதல் 51 நாழிகை 55 விஞடிக்கு ஆனிமாதம் முதல் தேதி சூரியோதயம் முன் மேஷ லக்கினத்தில் துலா ராசியில் ஸ்ரீ உலகரட்சகரான சூரியபகவான் ரிஷபராசியினின்றும் மிதுன ராசி சங்கிரமணமாக ஆனிமாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று ஷடசீதி புண்ணியகாலம். ஆனிமாதம் 27 தேதி 52 நாழிகை 59 விஞடிக்கு ஸ்ரீ சூரியபகவான் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிரவேசித்து மேகாதிபதியை ஏற்படுத்துகின்ருர். மேகாதிபதி குருபகவான் ஆவார். அதனுல் உலகத்தில் சுபிட்சம் ஓங்கும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வர சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குருமகான்கள் உலகத்திற்கு இறைவன் திருவிளையாடல் மகத்துவம் தம் திருவாய் மலர்ந்து விபரித்து அருள்வார்கள். பக்த கோடிகள் இராஜ பிரமுகர்கள் சிவநேய செல்வர்கள் தவவழி சிவாசார நல்வழி பரப்புகின்ற தம்பிரான் சுவாமிகள் அனைவருக்கும் ஈஸ்வர தியானம் செய்து அருள்பிரசாதம் வழங்கி, சிவநெறியில் திகழ ஆசீர்வதிப்பார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூஜைகள் மகா அபிஷேகங்கள் இலட்சார்ச்சனைகள் ஹோமயக்ஞங்கள் நடைபெற்று உலகத்தில் சுபிட்சம் நிலவும்.

குருப்பெயர்ச்சி

குறிப்பு :- சுக்கிலஞு ஆனிமீ 15உ (29-6-89) குருவாரம் பரணி நக்ஷத்திரம் உள்ள தினத்தில் உதயாதி 26 நாழிகை 28 விஞடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீ குருபகவான் மேடாதியாக 60 பாகையைக் கடந்து ரிஷப ராசியினின்றும் மிதுன ராசியில் மிருகசீர்ஷம் இரண்டாம் பாதத்திலிருந்து மூன்ரும் பாதத்தில் பிரவேசிக்கின்ருர். இதனுல் உலகமாந்தர்களுக்கு ஆண்டு பூராவும் நடக்கும் பலனுவது:- ரிஷபம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் இவ்விராசியையுடையோருக்கு தனலாபம், எல்லாவற்றிலும் இலாப பிராப்தி, விவாக பிராப்தி, புத்திர பிராப்தி, தொழில் உத்தியோகம்

இவற்றில் சித்தி, நல்ல சௌகரியம் இவை உண்டாகும். மேஷம், மிதுனம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இவ்விராசியை யுடையோருக்கு முறையே ஓர் இடம்மாற்றம், நிர்வாகத்தில் அலுவலர்களை மாற்றுதல், பரோபகார தர்மச் செலவு, தொழில் துறையில் மாறுதல் அல்லது ஓய்வு பெறுதல், ஓர் பொது நிர்வாகம் ஏற்றல், நடுவு நிலைமையில் இருத்தல், விவகார வழக்குகளில் சமாளித்தல், காலதாமதப்படுதல், ஆய்வுகளில் மறுபரிசீலனை யாகுதல் போன்ற சாதாரண பலனாகும்.

பரிகாரம் :- எல்லா இராசியையுடையோரும் குருவாரத்தில் ஸ்ரீ மேதாதட்சிணாமூர்த்தி சுவாமிக்கு அபிஷேகம் தீபாராதனை செய்தும், வேதம் ஓதுவாருக்கு அவ்விடத்திலேயே சுவர்ணதானம் வஸ்திரதானம் செய்தும் குருகிரகப்பிரீதி செய்தும் வர, மிகுந்த மேன்மை ஸ்திதி, பிரபுத்துவம், பாக்கியவிருத்தி, நல்ல செல்வாக்கு அளிக்கும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் பெருமதிப்பில் வந்துசேரும். நவரத்தினம் பதித்த ஆபரணம் தரும். ஜூன் 24 தேதி ஆனால் ஓர் இயந்திர சாதனம் தரும். புத்திரர் பௌத்திரருக்கு செல்வாக்கு ஏற்படும். எல்லாக் காரியங்களும் சமயோசித புத்தி மேம்பாட்டில் எளிதில் நடப்பதாகும். ஜூலை 12 இன் மேல் ஓர் விவாதத்தில் ஜெயபிராப்தியாகும். ஜூன் 17, 18 ஜூலை 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் கணிசமாக வந்துகொண்டிருக்கும். மனதில் உற்சாகம் ஏற்படும். எதிலும் திடமாகச் செயல்படுதல் ஆகும். ஜூன் 26 தேதியில் அரசாங்கத்திலிருந்து நற்செய்திவரும். நல்லபிரயோஜன சித்தியை ஏற்படுத்தும். மேலிடத்திய நன்மைகள் ஏற்படுதல், குருமார்களிடம் ஆசிபெறுதல், தெய்வதரிசனம் ஆகிய நற்பலனளிக்கும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கெடியில் வரச் செய்யும். அதற்கேற்ப நெறியான செயல்களில் பரோபகாராதிகளில் நல்ல வித செலவினங்களும் ஆகும். வித்துவத்துவத்தில் எழுத்துமூல விஷயங்களில் ஜூன் 24

தேதியின் மேல் அரசு நன்மை உண்டாகும். ஜுலை 14 இல்விசேஷ பலன் தரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜுன் 21, 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள்சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வந்துசேரும். அதற்கேற்ப பிரவிருத்திகளில் அரசகண்யம், விளம்பரம் ஆகியவற்றில் பரந்தநோக்கில்செலவினங்களும் செய்யும். நீர் இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலன் தரும். எல்லாக்காரியங்களையும் விரைவில் நடத்தச் செய்யும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜுன் 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் பெருமதிப்பில் வரவாகிக்கொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் தொழில் உத்தியோகம் இவற்றில் நற்பெயரும் பதவி உயர்வும் அளிக்கும். குலசம்பிரதாயத்தில் கௌரவத்தில் நல்ல செலவினை ஏற்கச் செய்யும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜுன் 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கெடியில்வந்துசேரும். வித்துவத்துவம், கலைத்துறையில் ஜீவனோபாய தொழில்துறைகளில் மேன்மை ஸ்திதியாகும். ஓர் நவீன பொருள் தரும். அரசு காரியங்கள் செவ்வையாக நடந்து வரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜுன் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் நல்ல வகையில் வந்து சேரும். வித்துவத்துவம், கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, தெய்வ தரிசனம், குருமார்களிடம் ஆசிபெறுதல் ஆகிய நற்பலன் ஏற்படும். வாகனசுகம் திருப்தியளிக்கும். இருப்பிட சௌகரியம் மேலாக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் புனிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜுன் 30, ஜுலை 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். ஜூன் 28 தேதிக்கு அரசாங்கத்திலிருந்து ஓர் நற்செய்தி வரும். அடிக்கடி வெளியூர் செல்தல், தெய்வ தரிசனம், பெரியோர் குருமார்களிடம் ஆசிபெறுதல் ஆகும். பரோபகார சிந்தையில் பல பெரிய காரியங்களில் ஈடுபாடு ஆகும். ஓர் தர்ம சொத்து நிர்வகிக்க ஏதுவாகும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூலை 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அரச கன்யத்தில் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறைகளில், செய்தொழில் உத்தியோகத்தில் பிரபலஸ்திதியாகும். ஜூன் 30 தேதி ஆனால் சத்துருக்கள் மித்திரமாவர்; சிரமம் நீங்கும். அரசாங்கம், பிரபலஸ்தர்களால் போற்றுதல்கள் நன்மைகள் ஏற்படுதல் ஆகும். எல்லாக்காரியங்களும் செம்மையாக நடைபெற்றுவரும். தாரம் புத்திரர்களால் மகிழ்ச்சியாகும். ஜூலை 4, 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் அதிகம் வரும். தக்க செலவினங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஜூன் 28 தேதியில் ஓர் பதவி உயர்வு தரும். ஆயினும் எல்லா நடைமுறை அலுவல்களிலும் முன் ஜாக்கிரதையில் இருந்துவர வேணும். குலதெய்வத்துக்குப் பூசைபோடுதலினின்றும் குடும்ப சுபிட்சம் மேலாகஇருந்துவரும். ஜூ 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கணிசமாக வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் நல்ல பிரயோஜனம் வரச்செய்யும். மேலிடத்திய நன்மைகள், நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, தெய்வதரிசனம் செய்தல் ஆகிய நற்பலன்ஏற்படும். எல்லா அலுவல்களும் சிறப்பாக நடந்துவரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூலை 9, 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9பாதங்களும் மிச்சிரபலனாகநடக்கும். பணவருமானம் நல்லவகையில்வரும். சகோதரர் புத்திரர்களின் சுபிட்சம் மகிழ்ச்சி தரும். விடுவாகன பிராப்தி நல்ல சௌகரியம் இருந்துவரும். ஜூன் 26 தேதி ஆனால் அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வரும். ஓர் நவீன பொருள் அனுபோக பிராப்தியாகும். எல்லாக்காரியங்களும் நல்ல விதமாக நடந்துவரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தானதர்மத்துடன் நடந்துவரும். ஜூன் 15, 16 ஜூலை 12, 31 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-V

பாடம் - 5.

ஸ்ரீலஸ்ரீசிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

பண்டார சாத்திரங்கள் :

ஸ்ரீகாசிகேதார கௌரியம்மை திருவருட்பா

ஸ்ரீ காசி பாகீரதியம்மை திருவருட்பா

முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பி. எச்டி.,
தருமபுரம்.

காசியில் கேதாரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அன்னை கௌரியாவள். இப்பெருமாட்டியை நோக்கி யருளிய பதிகம் இதுவாகும். இதன்கண் காணும் சிலசெய்திகள்,

1. அழகுக்கு அழகு செய்யும் அருள்முகம்.
2. உருவகத்தில் ஓர் அழகு.
3. செல்வத்துட் செல்வம்.

அழகுக்கு அழகு செய்யும் அருள் முகம் :

" முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும் " (707) என்பர் திருவள்ளுவர்.

உவத்தலும் காய்தலும் மாறிமாறி அமையும் நிலை மக்கட்கு உரியது. ஆனால் பெருமாட்டிக்கோ உவத்தல் அல்லது காய்தல்

என்றும் இல்லை. இவ்வாறு அருளொழுகும் திருமுகத்தை மனத்தாலும் கண்டு மகிழ்ந்து நிற்கும் குருமூர்த்திகள் அவ்வருள் முகத்தின் அழகிற்கு அழகு செய்யும் அணிநலன்களோடு கண்டு மகிழ்கின்றார். கண்டவாறு காட்டியும் அருளுகின்றார்.

வண்டணிசெய் மலரழகு புரியளகமுங் கொப்பு
வார்குழையும் இருதோடும் வெண்
மதிகோடி உதயமென வருபிரபை தருமுகமும்
வட்டமிடு சுட்டியொளியும்
தண்டரள நவரத்ந வாரமும் களபமிகு
தண்கொங்கையுங் கவின்செய்
சங்குசூடகமொடு பொலிந்திடு பசுங்கிள்ளை
தருமபய வரதகரமுங்
கண்டொடு நறுந்தேன் உறுங்கனி செழும்பால்
கனிந்த அமுதம் அனைய மொழியும்
கமலைகலை மகளமரர் குலதிலக மகளிர்புகழ்
கல்யாண சோபனமுமாய்
அண்டகோடிகள் அனுதினம் துதிசெய் காசி வாழ்
ஆதார சத்தியுமையே. (1)

என்பது அவ்வழகிய பகுதியாகும்,

உருவகத்தில் ஓர் அழகு :

இறைவனின் இன்னருளை வேட்டு நிற்கும் அருளாளர்கள் பலரும் அப்பெருமான் தம் மனத்தகத்து எழுந்தருளாமைக்குக் காரணம் தம் மன இறுக்கமேயாம் என்பர்.

" கல்லைப் பிசைந்து கனியாக்கித் தங்கருணை
வெள்ளத் தழுத்தி வினை கடிந்த வேதியனே "

' நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக. '

என்பனவாகிய திருவாக்குகள் நினைவு கூரத்தக்கன. இவ்வருளாளர்கள் தம்நெஞ்சம் கல்லாயிருத்தலின் இறைவன் எழுந்தருளுதற்குக் கடினமாகும் எனக் கருதுகின்றனர். ஆனால் நம் குருமூர்த்திகளோ தம் நெஞ்சைக் கல்லெனக் கருதிய வகையில் அவர்களோடு ஒத்திருப்பினும், அவ்வாறு கல்லாயிருக்கும் நிலையே

இறைவி தம் மனத்தகத்து எழுந்தருளுதற்கு எளிமையும், இனிமையும் ஆகும் என்கின்றார். அன்னை எழுந்தருளியிருக்கும் இடமெல்லாம் அரியமலை முகடுகளேயாம். அம்மலைமுகடுகளாகிய கற்களில் இருந்துபழகிய அன்னைக்குத் தம்மனக்கல்லில் இருத்தலும் எளிமையே என்பது குருமூர்த்திகளின் திருவுள்ளமாகும். இச்சிந்தனை புதுமையுடையதாகும்.

சீருற்ற கயிலாய சிகரமும் பயில் பெருஞ்
செம்பொன்மாமேரு கிரியும்
திகழ்மந்த்ர சயிலமுங் கந்தமா தனமும்
விந்தமொடு நீலகிரியும்
ஏருற்று வாழவே இமயத்தில் வந்துதித்து
இனிதுவளர் புதல்வியன்றோ
என்மனக் கல்லையோர் சிகரம் என்றெண்ணியே
இருந்து எனை இரட்சியம்மா. (3)

என்பது அப்பாடலாகும்.

செல்வத்துட் செல்வம் :

செல்வத்துட் செல்வமெனத் திருவள்ளுவர் குறிப்பன இரண்டாம். ஒன்று செவிச்செல்வம். பிறிதொன்று அருட்செல்வம். இவ்விரண்டனுள் பின்னதாய அருட்செல்வம் திருவருள் வழியும், அத்திருவருள்தேக்கம்பெற்ற அடியவர்வழியும் பெறத்தக்கதாகும். இவ்விழுமிய செல்வத்திற்கு இணையாக எச்செல்வமும் நிலை பெறுவதும் இல்லை. பயன்தருவதும் இல்லை. இதனை நம் குருமூர்த்திகள்,

திருவுற்ற மார்பினன் செல்வமொடு நான்முகன்
செல்வம் இந்திரர்கள் செல்வம்
சித்தர்சாரணர் வித்தி யாதரர்கள் செல்வமும்
தேவர் மகிழ்வுறு செல்வமும்
தருவுற்ற மாலைசெறி சகராஜர் செல்வமும்
சார்ந்துளோர் தம் செல்வமும்
தானென்று நானென்று வாழுமவர் செல்வமும்
சர்வதரர் தம் செல்வ மும்
கருவுற்ற பணிலமுற்றுயர் காசி நகர்மேவு
கருணைகடாட்சி உன்தன்
கழல் பரவும் அடியார்தம் செல்வத்தில் அணு அளவு
காண அவர் செல்வம் உளதோ. (4)

எனவரும் பாடற் பகுதியால் குறித்தருளுகின்றார்.

ஸ்ரீ காசி பாகீரதியம்மை திருவருட்பா

பாகீரதி என்பது கங்கையைக் குறிப்பதாகும். தமிழகத்தில் நிலம், ஆறு ஆகிய பொருள்களைப் பெண்பாலாக வைத்துப் போற்றுவது மரபாகும். ஆறுகளைப் பொருத்தமட்டில் பெண் பாலாக மட்டுமின்றி, பெண் தெய்வமாகவைத்துப் போற்றிவரும் மரபும் உண்டு. இவ்வகையில் கங்கையைக் குருமூர்த்திகள் தெய்வமாக வைத்துப் போற்றுகின்றார். காசிக்குச் செல்வோர் கங்கை நீராடுதலையும், காசி விசுவநாதப் பெருமான் உள்ளிட்ட மூர்த்திகளை வணங்குதலையும் பெரும் பேறுகக் கருதுவர்.

கங்கையின் பெருமை :

புனித மலையினின்றும் இழிந்து வரும் கங்கைப் பேராறு இறைவன் திருமுடிக் கண் உள்ள கங்கையேயாகும். அவ்வகையில் பெருமானின் திருமுடியில் இலங்கும் பெருமை அதற்கு உண்டு. நான்முகன் இறைவன் திருமுடியையும், திருமால் இறைவனின் திருவடியையும் காண முயன்று கண்டிலர். ஆனால் இக்கங்கையோ அப்பெருமானின் திருமுடிக்கண்ணிருந்து அனைவராலும் எஞ் ஞான்றும் வணங்கப் பெறுகிறது. இத்துணைப் பெருமை வாய்ந்தது கங்கையெனக் குருமூர்த்திகள் குறித்தருளுகின்றார்.

அன்ன மான சதுர் முகனும்
ஆதி வராகத் திருமாலும்
அடியும் முடியும் காணுமல்
அண்டம் அனந்தம் கடந்து நின்ற
தன்னை நிகராங் காசியில் வாழ்
சச்சிதானந்தன் முடியே
தாயே நீ வாழ் அகமென்றால்
தமியேன் அறிய மாட்டுவனே. (7)

இவ்வாறு பெருமானின் திருமுடிக்கண் அமைந்திருக்கும் பெருமையோடு அப்பெருமானின் திருமகளுக விளங்கும் முருகப் பெருமானைத் தாங்கியருளும் தகைமையும் அதற்கு உண்டென்ப தைப் பிறிதொரு பாடலில் குருமூர்த்திகள் குறித்தருளுகின்றார்.

கயிலைமலைக் காங்கேயனை ஈன்றெடுத்தருளும்
கருணை மந்தாகினி நதியே. (8)

என்பது அடிகளின் திருவாக்காகும்.

தீமை நீக்கும் திருக்கருணை :

தீதுநீங்கக் கடலாடியும், மாசுபோகப் புனல் படிந்தும் வந்த மரபு நம் தமிழ் மரபாகும். இங்குத்தீது எனக் குறிக்கப்படுவது அவரவர்களும் அறிந்தோ, அறியாமலோ செய்த தீவினைகளாகும். இத்தகைய தீவினையைப் போக்கும் பெருமை கங்கைக்கேயன்றி அக்கடலொடு கலக்கும் ஆறுகட்கும் ஆங்காங்கு அமைந்திருக்கும் நீர் நிலைகட்கும் உண்டு. இதனைச் 'சோமகுண்டம், சூரியகுண்டம் துறைமூழ்கிக் காமவேள்கோட்டம் தொழுதார் கணவரொடும் தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார் போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர்' 'கங்கையாடிலென், காவிரியாடிலென்' எனவரும் சான்றுகளால் அறியலாம். இவ்வகையில் கங்கை, காவிரி முதலிய பேராறுகள் முதலிடம் பெறத்தக்கன. கங்கையை அணுகில் செய்த தீமைகள் நீங்கும் என்றும், நீராடில் வீடு கிட்டும் என்றும் குருமூர்த்திகள் இருதிறனுக் குறித்திருக்கும் பெருமை ஈண்டு அறியத்தக்கதாம்.

அன்னை தந்தை ஆசானுக்க அயன்மால் காணு அடிமுடியாரிக்க
அடியார்மாதர் பசுக்கள் சேய்க்கமரர் முனிவர் பிதிர்களுக்குப்
பன்னு மறையோர் சிவர்கட்கும் பகர முடியாத் துரோகங்கள்
[பஞ்ச பாதகாதியவாய்,
பாவம் செய்தோர் என்பு கங்கை
தன்னில் அவர் பாதகங்கள் எல்லாம் சோதிஇரவிமுன் இருள்போல்
துடைப்பாய் மூழ்கில் வீடளிப்பாய். (9)

என்பது அப்பாடலாகும். கங்கையை அணுகிய அளவிலேயே பாதகங்கள் எல்லாம், நீங்கும் என்றது 'ஊரில் குறுகினேன் ஒரு மாத்திரை அளவு என்பேரில் குறுகினேன் பின்' என்னும் குமர குருபரரின் திருவாக்கை நினைவுகூரச் செய்வதாகும்.

பொதுவான கருத்துக்கள் :

அம்மையின் அருள் விளக்கும் மூன்று பதிகங்களிலும் காணத்தகும் பொதுவான கருத்துக்கள் இங்கு ஆராயப் பெறு கின்றன. அவ்வாறுனவை: குருமூர்த்திகள் முன்னோர் மொழி பொருளே அன்றி அவர்மொழியும் பொன்னேபோல் போற்றுதல். அம்மையிடம் வேண்டுகோள் விடுத்தல்.

முன்னோர் மொழிபொருள் :

தாய் உடன்று அலைக்குங்காலையும் வாய்விட்டு
அன்னாய் என்னும் குழவிபோல
இன்னா செய்யினும் இனிது தலையளிப்பினும்
நின்னுள் வரைப்பினள் நின் தோழி.

என்பது சங்கப்பனுவல். இளங்குழந்தைகள் தம் தாய் அடிப்பினும் அவர்களை வெறுப்பதில்லை. மாறாக அவர்களையே அழைத்து அணைத்துக் கொள்கின்றன. இவ்வரிய கருத்தை நம் குருமூர்த்திகளும்,

தள்ளித்துடித்து அழ அடித்துப் பிடித்துச் சுரீரென்று
[இடக்கிள்ளியே
துட்டநாயே விடு என்று அன்னை கோபித்துத் துரத்திலும்
[தாய்கால்விடாப்
பிள்ளையென நீ பெற்ற பிள்ளைநானேயாது பிழை அனந்தங்கோடி
[செய்
பேய்ப்பிள்ளை யானாலும் எனை அறிவிலா முழுப்பேதை என்றே
[இகழ்ந்து
தள்ளிவிட்டாலும் உன்பாதம் பிடித்து நின்று உனது வீடாப்
[காசியில்
சாவேன் எனக் கிடப்பேற்கு முன்சொல் அன்னை தன்கையால்
[பிள்ளை கன்னத்
தள்ளியே தன்முலைப்பால் கொடுப்பாள் என்ன அருள்முலைப்பால்
[கொடுப்பாய் (1-6)

எனும் பாடலில் குறித்தருளுகின்றார்.

அவர்மொழியும் பொன்னேபோல் போற்றுதல் :

முன்னோர் மொழிபொருளேயன்றி அவர்தம் மொழியும் பொன்னேபோல் போற்றும் பெற்றிமையும் நம் குருமூர்த்திகளிடத்து அமைந்துள்ளது. சிவஞானபோதம் அவன், அவள், அதுவெனும் அவை மூவினைமையின் எனத் தொடங்குகிறது. இவ்வரிய தொடர் 'அவன் அவள் அதுவெனும் சிவகோடிகளின்' (1-7) எனவரும் குருமூர்த்திகள் வாக்கில் அமைந்துள்ளது.

வேண்டுகோள் :

குருமூர்த்திகள் இறைவனின் வேறல்லர். அவனேயாவர். அந்நிலையில் அவர்கள் வேண்டத்தக்கது ஒன்றில்லை. எனினும் நம்மனோர் வேண்டத் தகுவனவற்றை அறிதற்கு அவர் வேண்டி அருளுகின்றார்.

யாரை இரக்கேன்?

அன்னையே நின்னை வணங்கியோர் இம்மை, மறுமை, அம்மை எனும் மும்மை நலன்களையும் பெறுவர். அங்ஙனமாக எனது ஆசாபாசங்கள் அனைத்தையும் விட்டு நின்தாளே புகலிடம் எனக் கருதி வந்தேன். நின்னையன்றி நான் யாரை இரப்பேன் என வினவுகின்றார். (1-6)

திருவடி சூட்டியருள்க :

விசாலாட்சி அன்னையே! அடியேன் எடுத்த பல பிறவிகளால் படைத்தற்குரிய நான்முகன் தன் கைசலித்தான். காத்தற்குரிய மால் திடுக்கிட்டான். கூற்றுவனும் அடியேனைப் பலகால் அழித்தற்கென ஓடிவந்து தன்கால் சலித்தான். ஆயினும் ஆணவத்தால் அடியேனுக்கு மட்டும் அச்சலிப்பு ஏற்பட்டிலது. எனினும் நின் கருணையால் நின் திருவடியை என் தலைமேல் சூட்டி ஆட்கொண்டருளுவாயாக என வேண்டுகிறார்.

செந்தா மரைத்தவி சிருந்தோன் படைத்துத் திருந்துதன்கை [சலித்தான்
செங்கண்மால் இன்றெனை அளித்திட்டு அளித்தே திடுக்கு [என்று அவன் சலித்தான்
அந்தகனும் என்னைத் துரத்திப் பிடித்தவன் அடிசலித்து உடல் [சலித்தான்
அடியனேன் இன்றளவெடுத்துஉடல் சலித்திலனென் [ஆணவத் துணிவும் என்னே
சிந்துரத் தந்தியும் சந்தனப் பந்தியும் செய்யலைக் கைவீசியே
செகமகிழ வருகங்கை சூழ்காசி நகரினில் திகழ் விசாலாட்சி [உமைமே
அந்தரம் இலாது எனது முன்வந்து நின்கமல அடியிணைகண்முடியின் [வைத்தே
அருட்கடை செய்து ஆளுவாய். (2-2)

இரவா வகை மெய்ப்பொருள் ஈந்தருள்வாய் :

கேதாரகௌளரியே, நீரில் குமிழியாம் செல்வத்தைநிலையெனக் கருதி வாழும் அறிவிலிகளைக் கண்டு அவர்பால் செல்வம் பெற வேண்டி அவர்களைப் புகழ்ந்தும், அவர் உவக்குமாறு பேசியும், அவரைச் சரணடைந்து வாழ்ந்தும் இராமல் நீ என்னை ஆண்டருள் வாய் (2-8) எனவேண்டுகின்றார். அது 'தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்' எனத் தொடங்கும் சுந்தரர் தம் திருவாக்கை நினைவு கூர்வதாகும்.

இறப்பும் ஓர் ஏருடைத்தாக :

இவ்வாறெல்லாம் வேண்டிடும் குருமூர்த்திகள் நிறைவாக இறப்புக் குறித்தும் வேண்டுகிறார். 'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என்கடவேன்' 'சாதலின் இன்னாது இல்லை' என வரும் குறிப்புக்கள் இறப்பின் இன்னலைக் குறிப்பனவாகும். இவ்வாறாய இன்னலின்றி, தாம் இறப்பது தமக்கே தெரியாது மிக எளியதாகவும், இனியதாகவும் நிகழ வேண்டுமென்று வேண்டு கின்றார்.

" அராவின்விடம் என்னவரும் மெய்ப்பிணி ஒழித்தே
அநாயாச மரணம் அருள்வாய் " (1-10)

என்பது அவர்தம் வாக்காகும்.

✻

ஆனி மாதச் சிறப்பு நாட்கள்

15—6—89 வியாழன், ஷடசீதி புண்ணியகாலம், திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம், பட்டீஸ்வரம் முத்துப்பந்தல்.

16—6—89 வெள்ளி, பிரதோஷம்,

19—6—89 திங்கள், பௌர்ணமி விரதபூஜை, மாத பூஜையில் முப்பழம் சாத்துதல், காரைக்கால் மாங்கனி உற்சவம். ஸ்ரீ அருணகிரி நாதர் குருபூஜை.

22—6—89 வியாழன், வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ பாலாம்பிகை உடனுகிய ஸ்ரீ வைத்திய நாதசுவாமிக்கும், சிறுகாட்டூர் ஸ்ரீ சித்திவிநாயகருக்கும், சம்வத்ஸராபிஷேகம். சங்கடஹா சதுர்த்தி.

23—6—89 வெள்ளி, திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமிக்கும், திருக்குவளை ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமிக்கும் சம்வத்ஸரா அபிஷேகம்.

26—6—89 திங்கள், மயிலாடுதுறை வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யே சுவரசுவாமிக்கும், ஸ்ரீ காசி விசுவநாதசுவாமிக்கும் சம்வத்ஸரா அபிஷேகம். காலாஷ்டமி,

27—6—89 செவ்வாய், ஸ்ரீ ஏயர்கோன்கலிக்காமர் குருபூஜை.

29—6—89 வியாழன், கிருத்திகை விரதம், தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

30—6—89 வெள்ளி, வேளூர் கிருத்திகை, பிரதோஷம், சிதம்பரம், ஆவுடையார்கோயில் முதலிய தலங்களில் ஆனித்திருமஞ்சன உற்சவ ஆரம்பம்.

1—7—89 சனி, 1399 ஆம் பசலி ஆரம்பம். மாதசிவராத்திரி.

2—7—89 ஞாயிறு, சர்வ அமாவாசை.

3—7—89 திங்கள், சோமவார பிரதக்ஷிணம்.

6—7—89 வியாழன், ஆயில்ய விழா.

7—7—89 வெள்ளி, சதுர்த்தி விரதம். தருமை ஆதீனம் 19 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள், தருமை ஆதீனம் 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் குருபூஜைகள்.

8—7—89 சனி, வியசிரா, இரவு நடராஜர் அபிஷேகம். ஸ்ரீ அமர்நீதி நாயனுர் குருபூஜை.

9—7—89 ஞாயிறு, சஷ்டி விரதம், ஆனித்திருமஞ்சன தரிசனம். திருவையாறு தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹார மூர்த்தி அபிஷேகம்.

10—7—89 திங்கள், தருமை ஆதீனம் 3 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

12—7—89 புதன், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

GNANASAMBANDAM
Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமை ஆதீனம்

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

தமிழ் வெளியீடுகள் விபரம்

1.	பதிக் கொள்கை	ரூ.	15—00
	[1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 84.		
	அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி)	ரூ.	2—30
2.	பசுக் கொள்கை	ரூ.	10—00
	[1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 66.		
	அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி)	ரூ.	2—30
3.	பாசக் கொள்கை	ரூ.	15—00
	[1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 63.		
	அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி)	ரூ.	2—30
4.	சைவ சமயக் கல்வி I	ரூ.	15—00
	[1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 96.		
	அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி)	ரூ.	2—60
5.	சைவ சமயக் கல்வி II	ரூ.	20—00
	[1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 112.		
	அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி)	ரூ.	2—60
6.	சைவ சமயக் கல்வி III	ரூ.	10—00
	[1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 108.		
	அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி)	ரூ.	2—60
7.	சைவ சமயக் கல்வி IV	ரூ.	10—00
	[1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 98.		
	அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி)	ரூ.	2—60
8.	கிரணாகமம் (ஞானபாதம்)	ரூ.	15—00
	[1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 58.		
	அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி)	ரூ.	2—80

கிடைக்குமிடம் :— இயக்குநர்,

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம், மயிலாடுதுறை - 609 001.
தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram,
... Press, Dharmapuram Mayiladuthurai 10-6-89.